ISSN 1391-9504

PUBLIC LIB. JAFFNA

Vijey விஜய்

# விஜய்

03.09.2008 - மலர் 05, இதழ் 26

Price Rs. 20.00
விலை ரூ: 20.00

## பாலைவனப் புழுதிப்புயல்

## "வலைப்பின்னல்" உருவான வரலாறு




## உலகை ஆளும் பத்திரிகை

விலை ரூபா 12/-

## மாவீரர் மகா அலெக்ஸாண்டர்

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேஷிய மரமனிதர் நலமடைகிறார்

மரமனிதர் (Tree man) என்று அழைக்கப்படும் இந்தோனேஷிய கிராமத்தவர் நலமடைந்து வருவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். மரம் வளர்வது போல் இவ்ருடைய உடலில் ஒருவகை தாவரம் போன்ற புல்லுருவியொன்று வளர்ந்து வந்து கொண்டு இருந்தது. இந்த வளர்ச்சியிலிருந்து சுமார் ஆறு கிலோகிராம் வரை மருத்துவர்கள் சிகிச்சை செய்து அகற்றியதையடுத்து தற்பொழுது இவர் வீடு திரும்பியுள்ளார்.

37 வயதுடைய டீட் என்னும் பெயருடைய இவர் மேற்கு ஜாவா கிராமப் பகுதியைச் சேர்ந்தவர். பந்துங் நகரில் இவருக்கு 9 மாத காலம் சிகிச்சை அளிக்கப்பட்டது. தாவர வளர்ச்சி போல் இவருடைய கைகள் கால்கள் மற்றும் ஏனைய பகுதிகளிலும் புல்லுருவிகள் காணப்பட்டன. இவற்றை அகற்றி இவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் இவர் விரைவில் பூரண நலம் பெறுவார் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.







இவரின் உடலில் ஏற்பட்டுள்ள இந்த வளர்ச்சி காரணமாக இவரால் நடக்கவோ அல்லது வேறு எந்த வேலைகளையும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

''தற்பொழுது நான் எனது பிள்ளைகளுடன் வாழமுடியும். என்னால் எங்கு வேண்டுமானாலும் போக முடியும்'' என்று இவர் மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

இவரால் இவருடைய குடும்பத்தைப் பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டதை அடுத்து இவருடைய மனைவி இவரை விட்டுச் சென்று விட்ட பின்னர் பிள்ளைகளும் உறவினர்களின் வீடுகளுக்கு சென்றுவிட்டனராம். இதன் காரணமாக இவர் கிராமத்தில் தனியாகவே வசித்து வந்துள்ளார்.

இவருடைய உடலில் இன்னும் மிகுதியாக உள்ள சுமார் 300 கிராம் வளர்ச்சிகளை அகற்றி சிகிச்சை பெறுவதற்காக இவர் மீண்டும் ஒக்டோபர் மாத இறுதியில் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியுள்ளதாகவும்.

இவருடைய உடலில் இனிமேலும் இத்தகைய வளர்ச்சிகள் ஏற்படாமல் இருக்கும் வகையில் மருத்துவர்கள் இவருக்கு உரிய மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்ள இருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

-ராஜா

## நான்கு காதுகள் உள்ள விசித்திரப் பூனை

அமெரிக்காவின் சிக்காக்கோ பகுதியில் நான்கு காதுகளை உடைய பூனையொன்றை ஒரு குடும்பத்தினர் வளர்த்து வருகின்றனர். யோதா என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் பூனையைப் பற்றிய தகவல்களை அறியும் வகையில் தொலைபேசி அழைப்புக்கள் தற்போது ஏராளமாக வருவதால் இக்குடும்பத்தினருக்கு பெரும் தலையிடி ஏற்பட்டுள்ளதாம்.



இந்தப் பூனை பிறந்து சுமார் 8 வாரம் ஆகியிருந்த நிலையில் அதனை ஒரு மதுபான விடுதிக்காரர் தமது வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் ஒரு கூண்டை அமைத்து அதில் இப்பூனையை வைத்திருந்தாராம். இரண்டு வருடங்களுக்கு முன்னர் வெலெரி, டெட்ரொக் என்னும் தம்பதியினர் மதுபான விடுதிக்குச் சென்றிருந்தபோது இந்தப் பூனையைப் பார்த்து அதன்மீது இரக்கப்பட்டு அதனை தத்து எடுத்து வளர்க்கத் தொடங்கினர். இந்தப்பூனையை ஒரு மிருக வைத்திய நிபுணரிடம் கொண்டு சென்று காட்டியபோது அவர் இப்படிப்பட்ட ஒரு பூனையை தான் இதற்கு முன் ஒரு போதும் கண்டதில்லையென்று கூறியுள்ளார்.

இப்படிப்பட்ட பூனைகள் பிறப்பது மிக அபூர்வம் என்று கூறப்படுகின்றது. 2004 ஆம் ஆண்டு ஜேர்மனியில் மேலதிகமாக இரண்டு காதுகளையுடைய ஆறுமாத வயதுடைய பூனைக்குட்டியொன்று விலங்குகள் சரணாலயமொன்றில் பாதுகாப்புக்காகக் கையளிக்கப்பட்டது.

அதேவருடம் ஏழு காதுகளுடன் பூனைக்குட்டியொன்று பிறந்திருப்பதாக ரஷ்ய ஊடகங்கள் தகவல் தெரிவித்தன.



யோதா என்ற இப்பூனையை வளர்க்கும் குடும்பத்தினர் அதுபற்றிக் கூறுகையில், அது மிகவும் சாதாரணமானதாகவும் பாசமுள்ளதாகவும் அறிவும் மகிழ்ச்சியுமுள்ளதாகவும் இருப்பதாகக் கூறினார்கள்.

## தாவரங்களுக்கு உயிர்

தாவரங்களுக்கும் உயிர் உண்டு என்று நிரூபித்தவர் இந்திய விஞ்ஞானியான ஜெகதீஸ் சந்திரபோஸ். அவர் ஒரு சமயம் இங்கிலாந்தில் இது பற்றி உரையாற்றிக் கொண்டிருந்தபோது மேலும் சில கருத்துக்களைக் கூறினார். ''மரம், செடி, கொடிகளும் நம்மை போலவே சுகத்தையும் துன்பத்தையும் அனுபவிக்கின்றன. மனிதன் விஷத்தால் இறந்து போவதைப் . போல, அவையும் விஷத்தால் இறந்து போகின்றன. இதனை என்னால் நிரூபிக்க முடியும்!'' என்றார்.

அறிவியலாளர்கள் அவரை ஆச்சரியத்துடன் பார்த்தனர். ''இது சாத்தியமற்றது'' என்று அவர்கள் கருதினர். இதன் பின் ஜெகதீஷ் சந்திரபோஸ் அங்கே பரிசோதனைக்காக வைக்கப்பட்டிருந்த செடிகள் சிலவற்றுக்கு ஊசியின் மூலம், தம்மிடமிருந்த நஞ்சினை ஏற்றினார். குறிப்பிட்ட நேரம் கடந்து போய்க் கொண்டிருந்தது. செடியில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஜெகதீஷ் சந்திரபோஸ் இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். அறிவியலாளர்கள் அவரை ஒரு கேலிப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது ஜெகதீஷ் சந்திரபோஸ் தன் இருக்கையை விட்டுக் கம்பீரமாக எழுந்தார். தெளிவான குரலில் பேச ஆரம்பித்தார்.

''இந்த நஞ்சினால், இந்தச் செடிகளுக்கு எவ்வித ஆபத்தும் இல்லை என்பதைக் கண்டு கொண்டீர்கள். ஆகவே, இந்த விஷத்தால் மனிதனுக்கும் எந்த விதமான கேடும் ஏற்படாது என்றுதான் நினைக்கிறேன்'' என்று கூறியவாறே அந்த நஞ்சுப் போத்தலில் இருந்த நஞ்சினைத் திடீரென்று குடித்துவிட்டார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த மக்கள் பரபரப்படைந்தனர். அறிவியலாளர்கள் திகைப்பும் அதிர்ச்சியும் அடைந்தனர். எங்கும் அமைதியின்மை நிலவியது. அப்போது கூட்டத்திலிருந்து ஒருவர் ஓடி வந்தார். அவர் ஜெகதீஷ் சந்திரபோஸின் காலில் விழுந்தார்.

''ஐயா, என்னை மன்னித்துவிடுங்கள். உண்மையில் நீங்கள் வெற்றி பெற்றவர்தான். அதை நான் அறிவேன். உங்களை இந்தச் சபையில் அவமானப்படுத்த வேண்டும் என்று நினைத்தேன். அதற்காக நஞ்சிற்குப் பதிலாக அதே நிறத்தில் தண்ணீரை நிரப்பி வைத்தேன். அதுதான் செடிகளுக்கு ஒன்றும் ஆகவில்லை'' என்று கூறினார். அவரை மன்னித்த ஜெகதீஷ் மீண்டும் உண்மையான நஞ்சை செடிகளுக்கு செலுத்த செடி, சிறிது சிறிதாகத் துவண்டு இறந்து போனது. அறிவியலாளர்கள் அவர் கூற்றை ஏற்றுக்கொண்டனர். உண்மையை வெல்ல எந்த சக்தியாலும் முடியாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களை சித்தப்பிரமைக்குள்ளாக்கிய தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை



பரீட்சை என்பது பரீட்சார்த்திகளின் அறிவுத் திறனை பரிசீலிக்கும் ஒரு சோதனைக் களமாகும். மாறாக, அது பரீட்சை வினாத்தாள் தயாரிப்பாளர்களின் புலமையை வெளிக்காட்டும் தேர்ச்சிக் களமல்ல. குறித்த வகுப்புகளுக்கான வினாத்தாளைத் தயாரிக்கும்போது கொடுக்கப்படும் வினாக்கள், குறித்த வகுப்புக்குரிய பாடத்திட்டத்தினை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

எனினும், இந்த வரையறைகளை முற்றிலும் மீறும் வகையில் அமைந்திருந்தது இம்முறை நடாத்தப்பட்ட தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சை. குறித்த வினாத்தாள்களில் வழங்கப்பட்டிருந்த வினாக்களில் திடீரென ஏற்படுத்தப்பட்டிருந்த மாற்றங்களும் குழப்பங்களும் பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்டு தொகுக்கப்பட்டிருந்த வினாக்களுமே இந்தப் பிள்ளைகளை சித்தப்பிரமைக்குள்ளாக்குவதாக அமைந்து விட்டன.

பின்தங்கிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில் திறமையான மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குப் பிரபல பாடசாலைகளில் கற்றலுக்கான அரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல், வறிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் இதில் சித்தியடைவதனூடாக அவர்களுக்கு சிறிய உதவித்தொகையை வழங்கல்



போன்ற நோக்கங்களுக்காகவே அரசாங்கம் இப்பரீட்சையை நடத்தி வருகின்றது. இதற்காக பெற்றோரும் அயராது பாடுபடுகின்றனர். அவ்வாறு தங்களைத் தயார்படுத்தி வந்த மாணவர்களை இவ்வாண்டின் புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் தயாரிப்பு முறையானது மன உளைச்சலுக்கும் அதிர்ச்சிக்கும் ஏமாற்றத்துக்கும் உள்ளாக்கியிருக்கின்றது.

5 ஆம் தரத்திற்கான பாடத்திட்டத்திற்கு உட்பட்ட விடயங்களை மாத்திரம் உள்ளடக்கியதாகவே பரீட்சை வினாத்தாள்கள் அமைய வேண்டும். இதனையே ஆசிரிய ஆலோசகர்களும் வலியுறுத்திச் செல்கின்றனர். அதன்படிதான் இந்த மாணவர்களும் கற்பிக்கப்படுகின்றனர். அப்படியிருக்க, இம்முறை ஏன் இந்த திடீர் குழப்பங்கள் எனப் பலரும் வினவுகின்றனர். ஆகவே, இம்முறை பின்தங்கிய பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் உட்பட ஏனைய பகுதி பாடசாலை மாணவர்களும் அதிக புள்ளிகளைப் பெறுவார்களா? என்பது சந்தேகத்திற்குரியதே. இதனால், பல மாணவர்கள் அரசினால் வழங்கப்படும் உதவித்தொகையைப் பெற முடியாமலும் போகலாம். இன்னும் சிலரின் பிரபல பாடசாலைகளில் அனுமதிக்கான கனவுகள் சிதைந்து விடலாம். இவை எல்லாவற்றையும் விட இது நாடளாவிய ரீதியில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதனை உள்நோக்கமாகக் கொண்டமைந்ததாக இருக்குமோ என பாடசாலை ஆசிரியர்களிடமும் பெற்றோர்களிடமும் சந்தேகத்தைக் கிளப்பி விட்டும் உள்ளது. எவ்வாறாயினும், இதனால் அதிக மன வேதனைக்கும் ஏமாற்றத்துக்கும் உள்ளானது நமது பிள்ளைகளே என்பதை சம்பந்தப்பட்டவர்கள் ஆழக்கருத்தில் கொள்ள வேண்டும்.

-ஜீநு

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

## சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி நாடளாவிய ரீதியிலான வினா-விடைப் போட்டி

டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையில் நாடளாவிய ரீதியிலான வினா-விடைப் போட்டியொன்றை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் அமைப்பு (PAFREL) மேற்கொண்டு வருகின்றது.

தமிழ், சிங்கள மொழிமூலங்களில் இப்போட்டியை நடாத்துவதற்கு அவ்வமைப்பு திட்டமிட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் மத்தியில் மனித உரிமைகள், ஜனநாயகம், நல்லாட்சி, மனித நேயம், சமாதானம் போன்றவை குறித்து அறிவை மேம்படுத்தல், அதனை ஊக்குவித்தல் போன்ற நோக்கங்களைக் கருத்தில் கொண்டே இப்போட்டியை ஏற்பாடு செய்வதாக 'பஃப்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டப் போட்டி மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்டு, அதில் வெற்றியீட்டும் அணிகளுக்கு தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். க.பொ.த (உ/தர) வகுப்புகளில் கற்கும் மாணவர்கள் நான்கு மாணவர்களைக் கொண்ட ஒரு அணியாக இப்போட்டியில் பங்குபற்றலாம். மேலும், இப்போட்டிக்கான விண்ணப்பங்களை அனுப்ப விரும்பும் அணியினர் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் இல.12/3, ரொபர்ட் டெரஸ், ரொபர்ட் குணவர்த்தன மாவத்தை, கொழும்பு-06 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## முஸ்லிம் பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணை விடுமுறை



நாட்டிலுள்ள சகல முஸ்லிம் பாடசாலைகளினதும் இரண்டாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் கடந்த 29 ஆம் திகதியுடன் நிறைவடைந்ததை அடுத்து, 30 ஆம் திகதியிலிருந்து நாட்டின் அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் இரண்டாம் தவணை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

ரமழான் நோன்பு கால விடுமுறையை ஒட்டி நிறைவு செய்யப்பட்டுள்ள மேற்படி முஸ்லிம் பாடசாலைகள், மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.


தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH Course
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாரே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்
* கிளாஸ் போகும் காலம் நேரம் மீதுதி / வீண் கட்டணங்கள் இல்லை
* குருகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய பேக் ஒன்றும் Tigo Sim Card (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்
முதல் இணையும் 500 மாணவ/மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்
இந்த Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 15/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 0773 123 523
மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரினப் பல்வகைமைத் தாபனம் (CBD)

உலகம் இன்று பாரிய அளவில் சூழல் பாதிப்பிற்கு உள்ளாகின்றது. இச்சுற்றாடல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு சர்வதேசம் பல சுற்றாடல் சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பெரும் பங்காற்றுகின்றது. எமது நாடும் அத்தகைய சூழல் பாதுகாப்பு இணக்கப்பாடுகள் பலவற்றிற்கு கட்டுப்பட்டுள்ளது. அதில் ஒரு இணக்கப்பாடுதான் உயிரினப் பல்வகைமைத் தாபனமாகும். இதனை CBD என சுருக்கமாக அழைப்பர்.

உயிரினப் பல்வகைமை பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்திக்




கிடையில் சமத்துவ நிலைப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் இந்த இணக்கப்பாட்டு அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாடொன்றின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் நடவடிக்கைகளில் உயிரினப் பல்வகைமை பாதுகாப்பிற்கு பங்களிப்பை பெற்றுக்கொள்வதை உறுதி செய்வதற்குத் தேவையான நடைமுறைகளை இனங்காணவும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

உலகின் அனைத்து நாடுகளும் தமது நாட்டின் தேசிய திட்டத்தை உருவாக்கும் பொழுது உயிரினப் பல்வகைமையை பாதுகாப்பது குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும்.

## இந்த நிறுவனம் நிறைவேற்ற வேண்டிய ஏனைய செயற்பாடுகள்

✱ உயிரினப் பல்வகைமையை பாதுகாத்தலும் நிரந்தரமாகப் பயன்படுத்தக்கூடிய உயிரினப் பல்வகைமையின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வதும் மேற்பார்வை செய்வதும்.

✱ உயிரினப் பல்வகைமையினால் நிறைந்துள்ள பிரதேசங்களை பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தி பாதுகாத்தல். பாதிக்கப்பட்ட பிரதேசங்களை-பாதிப்பிற்கு முகம் கொடுத்த சுற்றாடலை மீண்டும் பண்டைய நிலைக்குக் கொண்டு வரல்.



✱ பாதிப்பிற்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளான உயிரினங்களை பாதுகாத்தல். உயிரினப் பல்வகைமையை நிரந்தரமாகப் பயன்படுத்த நீண்ட காலமாக கடைப்பிடிக்கப்பட்ட சம்பிரதாய, பாரம்பரிய அறிவை தக்க வைத்து அந்த அறிவுச் செயற்பாட்டுக்கு மதிப்பளித்து அந்த அறிவை தொடர்ந்து பேணுவதோடு அதனை நடைமுறைப்படுத்தல்.



✱ வேறு நாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட உயிரினங்கள், வேறு நாடுகளில் இருந்து தாமாகவே வரும் உயிரினங்கள் என்பனவற்றின் மூலம் சுற்றாடல் கட்டமைப்பில் அவற்றின் வாழ்க்கைக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்த்தல்.

✱ தொழில்நுட்ப விளைவுகளால் ஏற்படும் பாதிப்பில் கவனம்செலுத்தி, அதிலிருந்து பாதுகாப்பதும் அதற்காக மக்களின் ஒத்துழைப்பை பெறுதலும்.

✱ இன்றைய உலகில் உயிரினப் பல்வகைமை குறித்தும் அதனைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்தும் மக்களுக்கு அறிவூட்டும் சிறந்த செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளித்தல்.

## எமது நாட்டிற்கு இதன் முக்கியத்துவத்தின் தன்மை

உலகின் உயிரினப் பல்வகைமையை பொறுத்தவரையில் மிகவும் உயர்ந்த அல்லது உச்சப் பிரதேசங்களாக (Biodiversity hots srots) இனங்காணப்பட்ட 25 வலயங்களில் இலங்கையும் ஒன்று. விவசாய நாடான இலங்கையின் பொருளாதாரம் முக்கியமாக விவசாய உற்பத்திகளில் தங்கியுள்ளது. மக்கள் உணவு, மருந்து மற்றும் வேறு தேவைகளுக்காக தாவரங்களை பயன்படுத்துகின்றனர். எமது நாட்டில் காணப்படும் மிருகங்கள், பறவைகள், தாவரங்கள் போன்ற வளங்கள் அனைத்தும் சூழல் மாசடைவதாலும் வளங்கள் அழிக்கப்படுவதாலும் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகின்றன. அத்துடன், சரியான முறையில் திட்டமிடப்படாத அபிவிருத்தி நடவடிக்கையின் காரணமாகவும் இவை அழிந்து போகும் அல்லது அருகிவரும் நிலைக்கு எமது நாடு முகம் கொடுத்து வருகின்றது. இதனால், இத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதல் மிகவும் முக்கியமானதாகும்.

உயிரினப் பல்வகைமைத் தாபனம் 1993 டிசம்பர் 29 ஆம் திகதி செயல்படத் தொடங்கியது. அதன் செயலகம் கனடாவின் மொன்ரியல் நகரில் அமைந்துள்ளது. உயிரினப் பல்வகைமை தாபனம் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து மேலதிக தகவல்களை சுற்றாடல் இயற்கை வள அமைச்சின் உயிரினப் பல்வகைமை செயலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இலங்கையில் உயிரினப் பல்வகைமை 1994 மார்ச் மாதம் முதல் செயல்படத் தொடங்கியது. உயிரினப் பல்வகைமை குறித்து மேலதிக விபரங்களுக்கு www.biodiv.org எனும் இணைய முகவரியுடன் தொடர்புகளை ஏற்படுத்த முடியும்.

**ப.இரஞ்சித் ஜெயகர்**


## விஜய் சந்தா விபரம்

'விஜய் பத்திரிகைக்கு சந்தா செலுத்தி தபால் மூலமும், நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

| | 1 வருடம் | 6 மாதம் |
|---|---|---|
| நேரடி விநியோகம் (கொழும்பிற்குள்) | ரு.624/= | ரு.312/= |
| தபால் மூலம் | ரு.1404/= | ரு.702/= |

பின்வரும் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்புங்கள்
*(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)*

பெயர்: ....................
முகவரி: ....................
தொ.பே.இல: ....................
எமக்கு .............. மாதம்/வருடத்திற்கான இதழ்களை அனுப்பி வைக்கவும்.

.................... ....................
கையொப்பம் திகதி

உங்கள் சந்தாத் தொகையினைக் காசுக் கட்டளையாகவோ (Money Order), காசோலையாகவோ (Cheque) அனுப்பலாம். காசுக்கட்டளையை மாற்றும் தபால் கந்தோர் SLAVE ISLAND POST OFFICE எனக் குறிப்பிடவும். காசோலை (Cheque) அனுப்புவோர் Wijeya News Papers Ltd என்ற பெயருக்கு எழுதவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

SUBSCRIPTION MANAGER,
Wijeya Newspapers Ltd.,
8, Hunupitiya Cross Road, Colombo-02

மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல - 0112479653


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டைட்டன் உபகோளில் திரவ ஏரி உள்ளது



சனிக் கிரகத்தின் டைட்டன் உபகோளை ஆய்வு செய்த 'கெசினி' விண்வெளி ஆய்வோடம், கடந்த வாரம் அபூர்வமான விடயமொன்றைக் கண்டுபிடித்துள்ளது. டைட்டனின் மேற்பரப்பில் திரவ ஹைட்ரோ காபன் இருக்கின்றது என்ற விடயமே அது. இதன்படி, எமது ஞாயிற்றுத் தொகுதியில் புவியைத் தவிர்த்து, மேற்பரப்பில் திரவத்தைக் கொண்டிருப்பது சனிக் கிரகத்தின் டைட்டன் உபகோள் மாத்திரமே.

தமக்குக் கிடைத்த புகைப் படங்கள் மற்றும் விபரங்களின்படி, டைட்டனில் திரவ 'ஈதென்' உள்ளமையை விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தி உள்ளதாக 'நாஸா' நிறுவனம் அதன் ஊடகவியலாளர் மாநாடொன்றின் போது தெரிவித்திருந்தது.


'கெசினி' விண்வெளி ஆய்வோடமானது சனிக் கிரகத்தையும் அதன் வளையங்களையும் சனிக் கிரகத்தின் உபகோள்களையும் ஆய்வு செய்யும் நோக்கில் அனுப்பி வைக்கப்பட்டது. இதுவரையில் 'கெசினி' விண்வெளி ஓடமானது கிரகம் ஒன்றின் அளவை ஒத்த, மிகப்பெரிய உபகோளாகிய டைட்டனைச் சுற்றி 40 தடவைகள் பயணித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. விஞ்ஞானிகளோ டைட்டனில் மீதென், ஈதேன் மற்றும் ஹைட்ரோ காபன்களால் நிறைந்த சமுத்திரம் இருக்குமென்றே இதற்கு முன்னர் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், விஞ்ஞானிகளால் எதிர்பார்க்கப்பட்ட மாபெரும் சமுத்திரங்களுக்குப் பதிலாக திரவ ஏரிகளையே தற்போது 'கெசினி' கண்டுபிடித்துள்ளது.

இந்த ஏரிகள் திரவத்தால் நிறைந்துள்ளனவா? அல்லது கனமான திண்மப் பொருட்களால் நிறைந்துள்ளனவா? என்பது குறித்து ஆரம்பத்தில் தீர்மானிக்க முடியாமல் இருந்தது. எனினும், இந்த புதிய கண்டுபிடிப்பின்படி, டைட்டனின் மேற்பரப்பில் திரவத்தால் நிறைந்த ஏரிகள் இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது என 'கெசினி' நடவடிக்கைகளை மேற்கொண்ட பொபி பிரவுன் கூறியுள்ளார்.

'கெசினி' விண்வெளி ஆய்வோடமானது, 2004 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் சனிக் கிரகத்தை அண்மித்திருந்தது. அவ்வருடத்தின் இறுதிக்காலத்தில் 'கெசினி' ஓடத்துடன் பொருத்தப்பட்டிருந்த 'ஹியுஜென்ஸ்' என்னும் சிறிய ஆய்வோடமானது பெரசூட்டின் உதவியுடன் டைட்டனின் மேற்பரப்பில் இறக்கப்பட்டது. இந்த விண்வெளி ஆய்வில் ஐக்கிய அமெரிக்காவின் 'நாஸா' நிறுவனம் மாத்திரமன்றி, ஐரோப்பாவின் விண்வெளி முகவர் நிறுவனம் மற்றும் இத்தாலியின் விண்வெளி முகவர் நிறுவனம் என்பனவும் ஈடுபட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## டைட்டன் மேற்பரப்பில் திரவம் கண்டுபிடிப்பு

சனிக் கிரகத்தின் டைட்டன் உபகோளின் மேற்பரப்பில் ஈதென் மற்றும் திரவ ஹைட்ரோ காபன் இருப்பதாக அமெரிக்காவின் 'நாஸா' நிறுவனம் கூறுகின்றது.




# ஒளி காணப்போகும் நிலவின் இருண்ட பகுதிகள்

மில்லியன் கணக்கான வருடங்களாகவே சூரியனின் ஒளி படாத பிரதேசங்கள் நிலவில் காணப்படுகிறது என்றால் நீங்கள் நம்புவீர்களா? நம்பித்தான் ஆகவேண்டும். நிலவின் துருவங்களில் காணப்படும் இவ்வாறான இருள் சூழ்ந்த பாறைப் பள்ளத்தாக்குகளில் ஆராய்ச்சி செய்வதால் பல உயரிய அவசியமான தரவுகளை பெற்றுக் கொள்ள முடியுமென விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிடுகின்றார்கள். நாஸா, இந்த இருண்ட பகுதிகளில் ஒளி வழங்கி ஆராய்ச்சி செய்ய ஆயத்தமாகியுள்ளது.

அதன்படி, அடுத்த வருடம் (2009) மே மாதத்திற்கும் ஓகஸ்ட் மாதத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் LCROSS எனப்படும் நாஸாவின் விண் ஆய்வு முறைமை விண்ணுக்கு ஏவப்படவுள்ளது. இது நிலவின் நிலையான இருள் சூழ்ந்த பகுதிகளுக்குச் சென்று 6.5 பில்லியன் ஜூல் சக்திகளை வெளியிட்டு, அவ்விடங்களில் ஒளியை வழங்கி இருளை நீக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேசமயம், இவ்வாறு வழங்கப்படும் ஒளியின் காரணமாக இருளிலிருந்து வெளிப்படும் விடயங்கள் பற்றி ஆய்வுகளை மேற்கொள்ள ஆராய்ச்சியாளர்கள் ஆயத்தமாகியுள்ளனர். இவர்களின் கூற்றின்படி, இந்த இருள் நிறைந்த பிரதேசங்களில் நீர் காணப்படுவதற்கான சாத்தியங்கள்



அதிகளவில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த ஆய்வு முயற்சியின் முக்கிய நோக்கம் நிலவில் நீரைத் தேடுவதாகும். நீரென்பது உயிர்களின் வாழ்வுக்கு அத்தியாவசியமாக அமைவதுடன் தாவரங்கள் வளர்ச்சியடைதல் போன்ற இன்னோரன்ன தேவைகளுக்கும் பயன்படுவதால், நீர் பற்றிய ஆராய்ச்சிகளுக்கு LCROSS செயற்றிட்டம் புதிய ஆய்வு முடிவுகளை வழங்கும் என நம்பலாம்.

# சூரியனுக்கே விண்கலமா...?

விண்வெளி ஆராய்ச்சிகளை மேற்கொள்வதில் முன்னோடியாக விளங்கும் 'நாஸா', எமது ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள கோள்களுக்கும் துணைக் கோள்களுக்கும் விண்ணோடங்களை அனுப்பி, ஆராய்ச்சிகளைத்



தொடர்ந்து மேற்கொண்டு வருவது நீங்கள் அறிந்ததே.

இவ்வாறிருக்க, அடுத்து சூரியனுக்கும் விண்கலமொன்றை அனுப்பும் முயற்சியில் 'நாஸா' தீவிரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென 3,000 கோடி ரூபா செலவில் 2,600 பரன்ஹைட் வெப்பத்தைத் தாங்கக்கூடிய வெப்பத்தடுப்புத் தகடுகளைக் கொண்ட 453 கிலோகிராம் எடையுள்ள விண்கலம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

நிமிடத்திற்கு 125 கிலோமீற்றர் வேகத்தில் சூரியனை வலம் வரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த விண்கலமானது, 2015 ஆம் ஆண்டளவில் விண்ணுக்கு ஏவப்படும் என்று நாஸாவின் சூரியன் பற்றிய ஆய்வுக்கான திட்டமேலாளர் என்ட்ரூ டொன்ஸ்லர் தெரிவித்துள்ளார்.

noolaham.org | aavanaham.org

# எங்கு சென்றாலும் பாதுகாப்பா

**சிறு வயது முதல் பொறுப்புடனும் புரிந்துணர்வுடனும் செயற்படுவதற்குப் பழகுவதன் மூலம் பல விபத்துக் களை தவிர்த்துக் கொள்ள முடியும்**

**அபாயம் நிறைந்த விளையாட்டுக்களில் ஈடுபடுவது பிள்ளை களின் இயல்பாகும். எனினும், அறியாமல் செய்யும் சிறு காரியங் களும் பெரும் அழிவு களை ஏற்படுத்தி விட லாம். அதனால், தற்கா லிக சந்தோஷத்தை விட பாதுகாப்புக் குறித்து அக்கறை கொள்வது மிக அவசியமாகும்.**

## சுற்றுலா மேற்கொள்ளும் போது....

சுற்றுலா செல்லும்போது குறிப் பாக தமது பாதுகாப்புக் குறித்தும் பிறரின் பாதுகாப்புக் குறித்தும் அவதானமாக இருத்தல் வேண் டும். ஏதாவது உடல் நலக்குறைவு இருந்தால் வளைவுகள் அதிகம் உள்ள வீதிகளில் பயணங்களை மேற்கொள்வது நல்லதல்ல. இவ் வாறான பயணங்களால் அயர்ச்சி ஏற்பட்டு சுகவீனம் அதிகரிக் கக்கூடும். அவ்வாறான நிலையில் பயணத்தில் இணைந்து கொண்ட ஏனையவர்களும்அசௌ கரியமடைய நேரிடும். நீண்ட தூரப் பயணங்கள் மேற்கொள் ளும்போது குமட்டல், வாந்தி, மயக்கம் ஆகிய உடல் உபா தைகள் ஏற்படுமாயின் அவற்றை தவிர்த்துக் கொள்ளும் வகையில் தேவையான மருந்துகளை எடுத்துச் செல்வது அவசிய மாகும்.

சில பிள்ளைகள் பெற்றோர் களுக்குத் தெரியாமல் நண்பர் களுடன் சுற்றுலா மேற்கொள்ளு தல் எந்த சந்தர்ப்பத்திலும் ஏற்க முடியாததாகும். அது மிகத் தவ றான காரியமாகும். சுற்றுலா மேற் கொள்ள விரும்பினால் அதற்காக பெற்றோரின் அனுமதியைப் பெறுதல் அவசியமாகும். அத்து டன் அந்த சுற்றுலாவின் போது வயது வந்த ஒருவரையும் இணைத்துக் கொள்ளல் அவசிய மாகும்.

## வாகனத்தில் பயணம்

சுற்றுலாவின் போது பயன்படுத் தும் வாகனத்தின் செயற்பாடு குறித்து அவதானம் செலுத்துதல் வேண்டும். வாகனத்தின் செயற் பாடு, தேவையான எரிபொருள் ஆகியன குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். வாகனக் கதவுகளின் திறப்புகள் ஒழுங் காக செயற்படுகின்றனவா என்று கவனம் செலுத்துங்கள். இல்லாவிடின் கதவின் அரு கில் இருந்து பயணிக்கும் போது ஏதேனும் விபத்துக்கள் ஏற்படலாம். அதேபோன்று பஸ்ஸில் பயணிக்கும் போது வாசற்படியில் பயணிக்கக் கூடாது. வாகனத்தின் செயற் பாடுகள் குறித்து வாகனச் சாரதி பொறுப்பு ஏற்கக் கூடிய வரா என்பது குறித்தும் உறுதிப் படுத்திக் கொள்ளவேண்டும்.





## செய்யக்கூடாதவை

சில பிள்ளைகள் வாகனங் களில் பயணிக்கும் போது வாகனத்திற்கு வெளியே தலையை நீட்டிப் பார்த் துக் கொண்டு இருப்பார்கள். இது மிகவும் ஆபத்தானதாகும். அவ் வாறு செய்யும் போது தலை ஏதா வது தூணில் அல்லது பிற வாக னங்களில் மோதி விட வாய்ப் புண்டு. வாகனங்களில் செல்லும் போது வெற்று தண்ணீர்ப் போத் தல்களை வெளியில் வீசக்கூடாது. அவை வீதியில் பயணிப்பவர் களின் உடலில் பட்டு காயங்களை ஏற்படுத்தி விடும்.

## ஆற்றில் இறங்குவது கவனம்

'இந்த இடத்தில் குளிப்பதுஆபத் தானது' என்று அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள ஆற்றுப் பிரதே சங்களில் நீராடுவதை தவிர்த்து விடுங்கள். சில பிள்ளைகள் சுற்று லாப் பயணங்களின் போது குறிப் பிட்ட இடம் குறித்து எந்தவித மான எச்சரிக்கையும் இன்றி ஆற் றில் நீராட முனைகின்றனர். அது மிகத் தவறான காரியமாகும். நீராட ஒதுக்கப்பட்டுள்ள இடங் களில் நீராடுவதே சிறந்தது. ஒரு சில நீர்நிலைகளில் விஷம் கொண்ட மீன் வகைகள் மற்றும் முதலைகள் இருக்கக்கூடும். நீர் நிலைகளில் இறங்குவதற்கு முன் னர் அது பற்றி விழிப்புட[illegible] இருப்பது அவசியமாகும். இடுப்பளவு நீர் உள்ள நீர் நிலை களில் நீராடுவதே பாதுகாப்பா னதாகும். குறிப்பாக பிள்ளைகள் பெற்றோர்களின் அல்லது ஏனைய வயது வந்த உறுப்பினர்களின் உதவியுடன் நீர்நிலைகளில் நீராடு வதே சிறந்ததாகும்.






ஆழம் பற்றி தெரியாத நீர் நிலைகளில் குளிக்காதீர்கள்




வாகனத்தில் செல்கையில் வெளியில் தலையையோ, கையையோ நீட்டாதீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சந்தேகத்துக்குறிய பொருட்களைக் கண்டால் தெரிவியுங்கள்


விலங்குகளை தூரத்தில் இருந்து பார்த்து ரசியுங்கள்


தேனீ, குளவி கூடுகளுக்கு கல்லெறியாதீர்கள்

# ...க இருப்பது அவசியம்

## வனாந்தரங்களில் சுற்றுலா


சரணாலயங்கள், அடர்ந்த வனப் பகுதிகள், மலைப்பகுதிகளில் சுற்றுலா மேற்கொள்ளும் போது கவனமாக நடந்து கொள்ளுங்கள். குறிப்பாக வனாந்தரப் பகுதிகளில் பயணிக்கும் போது ஏனைய உறுப்பினர்களுடன் சேர்ந்தே பயணியுங்கள். அது உங்களுக்கு பாதுகாப்பானதாக அமை[illegible]. வனாந்தரப் பகுதிகளில் விலங்குகளை வேட்டையாடப் பொறிகள் வைக்கப்பட்டிருக்கும். அந்தப் பகுதிக்குள் நீங்கள் இடம் மாறிச் செல்ல நேர்ந்தால் அதில் அகப்பட நேரிடும்.

சரணாலயங்களின் சூழல் நமக்கு பழக்கமில்லாதது. இதனால், வழி காட்டியின் உதவி கட்டாயம் எமக்குத் தேவைப்படும். இங்கு விலங்குகள் சுதந்திரமாக நடமாடும். இந்த விலங்குகளுக்கு நாம் இடையூறாக இருக்கக்கூடாது. கத்திக் கூச்சலிடுவதனால் அங்கு வசிக்கும் விலங்குகள் கலவரப்பட்டு உங்களுக்கு ஆபத்தினை விளைவிக்கக்கூடும். மான்கள், முள்ளம்பன்றிகள் ஆகிய அப்பாவி விலங்குகள் கூட அச்சத்தினால் கலவரமடையக்கூடும். அதனால், விலங்குகள் அச்சமடையாத அளவுக்கு தூரத்தில் நின்று அவற்றைக் கண்டு ரசியுங்கள்.

## மலை ஏறுதல்

வேகமாக காற்று வீசும் போது மலை முகடுகளில் நிற்பது மிக ஆபத்தானது. காற்றின் வேகத்தினால் மலையிலிருந்து நீங்கள் கீழே தவறிவிழ நேரிடும். அதேபோன்று மலை ஏறும்போது போட்டி போட்டுக் கொண்டு முன்னே வேகமாகச் செல்வதால் கால் தடுக்கி விழ நேரிடும். இதனுடன் பள்ளங்கள், மலை முடிவுகளை குனிந்து பார்ப்பதும் ஆபத்தானது. அதேபோன்று, சதுப்பு நிலப் பிரதேசங்களில் பயணிப்பதும் ஆபத்தானதாகும். ஒரு சில சதுப்பு நிலங்களில் ஆழமான குழிகள் கூட இருக்கலாம்.




நீர்ப்பகுதிகளில் செல்வது ஆபத்தை ஏற்படுத்தக்கூடும்

## விலங்குகளுக்கு இடையூறு விளைவிக்காதீர்கள்

சீகிரியா போன்ற இடங்களில் அதிகளவில் தெள்ளுப் பூச்சிகள், தேனீக்கள் ஆபத்தான குளவி இனங்கள் உள்ளன. அவற்றின் கூடுகள் மீது கல்லெறிதல், குழப்புதல் என்பனவற்றை மேற்கொள்ளக்கூடாது. அது மிக ஆபத்தான செயலாகும். அவற்றுக்கு இடையூறு விளைவித்தால் அவை ஆவேசமாகத் திருப்பி உங்களைத் தாக்கும்.

## அவதானமாக இருங்கள்

சுற்றுலாவின் போது மட்டுமல்ல; பாடசாலையில், பெருந்தெருக்களில், பஸ்களில் அவதானமாக இருப்பது அவசியமாகும். உங்களின் அவதானம் உங்களுக்கு மட்டுமன்றி நாட்டிற்கும் பாதுகாப்பினைத் தரவல்லது. சந்தேகத்திற்குரிய பொருட்களைக் கண்டால், பெற்றோருக்கு, அதிபருக்கு, ஆசிரியருக்கு அல்லது பொலிஸாருக்கு அது பற்றி அறிவிக்கவேண்டும். அவ்வாறான பொருளை ஒருபோதும் தொடாதீர்கள். அதேபோன்று சந்தேகத்திற்குரிய வகையில் நடமாடும் நபர்கள் குறித்து அவதானமாக இருங்கள். அவ்வாறான நபர்களுடன் பேசுவதை தவிர்த்து விடுங்கள். அவர்கள் தரும் பொருட்கள் எதனையும் ஏற்காதீர்கள்.

பாடசாலை செல்லும் போதும் வீடு திரும்பும் போதும் வீதியில் வீணே நேரத்தைக் கழிப்பதை தவிர்த்து விடுங்கள். பாடசாலைக்குச் சென்றவுடன் வகுப்பறையில் சந்தேகத்திற்குரிய பொருட்கள் ஏதேனும் உள்ளதா என்பது குறித்து ஆராய்ந்து பார்ப்பது உங்கள் கடமையாகும். அவ்வாறாயின் அது பற்றி அதிபருக்கு, ஆசிரியருக்கு உடன் அறிவியுங்கள். சில வேளைகளில், பொதுப் போக்குவரத்து சாதனங்களில் அவ்வாறான சந்தேகத்திற்குரிய பொருட்கள் ஏதேனும் இருக்கக்கூடும். அது பற்றி சாரதிக்கும் பயணிகளுக்கும் அறிவியுங்கள்.

## திடசங்கற்பம் கொள்க!

பிள்ளைகளே! நீங்கள் உங்கள் பெற்றோரின் உயரிய சொத்து. முன் பின் சிந்திக்காமல் நீங்கள் மேற்கொள்ளும் பிடிவாதமான செயல்கள் காரணமாக நீங்கள் மட்டுமன்றி உங்கள் அன்பான பெற்றோர்களும் அசௌகரியங்களுக்குள்ளாவார்கள். அதனால், புரிந்துணர்வுடன், புத்திசாலித்தனத்துடன் செயற்பட திடசங்கற்பம் கொள்ளுங்கள். அது உங்கள் எதிர்கால வாழ்க்கைக்கு பேருதவியாக அமையும் என்றே கூற வேண்டும்.

## நினைவில் கொள்ளுங்கள்

- பெற்றோரின் அனுமதியுடன் சுற்றுலாக்களை மேற்கொள்ளுங்கள்.
- போட்டி போட்டுக்கொண்டு மலைஏறுவதை தவிருங்கள்.
- சரிவர அறியாத நீர்நிலைகளில் நீராட முயற்சிக்காதீர்கள்.
- வாகனங்களில் பயணிக்கும் போது தலையை, கைகளை வெளியில் நீட்டாதீர்கள்.
- சந்தேகத்திற்குரிய பொதிகள் குறித்து அவதானமாக இருங்கள்.
- தூரத்தில் நின்றுவனவிலங்குகளைப் பார்வையிடுங்கள்.
- தேன் கூடுகளுக்கு கல்லெறியாதீர்கள்.
- சதுப்பு நிலங்களில் நடக்க முயற்சிக்காதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திப்பத்திரிகை:

# தகவல் ஊடகங்களின் முடிசூடா மன்னன்

நவீன உலகில் ஊடகத்துறை மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது. இன்று எத்தனையோ தகவல் தொடர்பாடல் சாதனங்கள் வந்தாலும் தாங்களே முடிசூடா மன்னர்கள் என்பதை நாளேடுகள் மீண்டும் நிரூபித்துள்ளன.



செய்திப்பத்திரிகைகளின் உலகளாவிய கூட்டமைப்பு (World Association of Newspapers-WAN) 2007 ஆம் ஆண்டு ஓர் அறிக்கையை வெளியிட்டது. உலகளாவிய ரீதியில் செய்தித்தாள்களின் விற்பனை வளர்ச்சி 2.3 சதவீதத்தினால் உயர்ந்துள்ளதாக அந்தக் கூட்டமைப்பு தெரிவிக்கின்றது. இதன் மூலம் செய்திப்பத்திரிகைகளை வாசிப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளமை மறைமுகமாக உணர்த்தப்படுகின்றது எனலாம்.

## விற்பனையில் சாதனை

உலகளாவிய ரீதியில் கூடிய செய்தித்தாள் சந்தையைக் கொண்ட நாடு சீனாவாகும். இங்குதான் உலகிலேயே அதிகளவு பத்திரிகைகள் விற்பனையாகின்றன. சீனா, நாளொன்றுக்கு 98.7 மில்லியன் பத்திரிகைப் பிரதிகளை விற்பனை செய்து முதலிடத்தை பெற்றுக் கொண்டுள்ளது. இரண்டாவது செய்தித்தாள் சந்தையைக் கொண்ட நாடு இந்தியாவாகும். இங்கு நாளொன்றுக்கு 88.9 மில்லியன் பிரதிகள் விற்பனை ஆகின்றன. ஜப்பான் 69.1 மில்லியன் பிரதிகளை விற்று மூன்றாம் இடத்தை தன் வசமாக்கியுள்ளது. அதனை அடுத்து ஐக்கிய அமெரிக்கா 52.3 மில்லியன், ஜேர்மனி 21.1 மில்லியன் என்ற எண்ணிக்கையில் நாள்தோறும் செய்தித்தாள்களை விற்பனை செய்து வருகின்றன. உலகில் மிக அதிகமாக விற்பனையாகும் முதல் பத்து செய்தித்தாள்களில் ஏழு செய்தித்தாள்கள் ஆசியாக் கண்டத்தில் இருந்தே வெளியாகின்றன.

## வாங்கி வாசிப்பதில் சாதனை

பத்திரிகைகளை வாங்கி வாசிப்பதில் உலகில் ஜப்பானியர்களுக்கே முதலிடம். நாளொன்றுக்கு ஒவ்வொரு ஆயிரம் ஜப்பானியர்களில் 631 பேர் செய்தித்தாள்களை வாங்குகின்றனர். இதனையடுத்து, நோர்வே இரண்டாம் இடத்தில் இருக்கின்றது. அங்கு ஆயிரத்திற்கு 601 பேரும் மூன்றாவதாக தென் அமெரிக்காவின் கொலம்பியாவில் ஆயிரத்திற்கு 588 பேரும் பின்லாந்தில் ஆயிரத்திற்கு 515 பேரும் மற்றும் சுவீடனில் 466 பேரும் ஆர்வத்துடன் செய்தித்தாள்களை வாங்கி வாசிக்கின்றனர்.

## அதிக நேரம் வாசிப்பவர்கள்

பத்திரிகை வாசிப்பதில் அதிக நேரத்தை செலவிடுவது பெல்ஜியம் நாட்டு மக்களே. இவர்கள் நாளொன்றுக்கு சுமார் 54 நிமிடங்களை பத்திரிகை வாசிப்பதற்காகச் செலவிடுகின்றனர். இதனை அடுத்து சீனர்கள், பின்னிஷ் [பின்லாந்து மக்கள்] மற்றும் தென் அமெரிக்காவின் பிரேசில் நாட்டவர்கள் அனைவரும் சராசரி ஒரு நாளில் 48 நிமிடங்களை பத்திரிகை வாசிக்க ஒதுக்குகின்றனர்.




## உலகில் அதிகளவு விற்பனையாகும் நாளேடுகள்

| | பத்திரிகையின் பெயர் | நாடு | ஒரு நாளைய விற்பனை (பருமட்டாக) |
|---|---|---|---|
| 01 | யொமியுரி ஷிம்பன் | ஜப்பான் | 8700,000 |
| 02 | அசாஹி ஷிம்பன் | ஜப்பான் | 7400,000 |
| 03 | பீபல்ஸ் டெய்லி | சீனா | 6000,000 |
| 04 | பைல்ட் | ஜேர்மனி | 5900,000 |
| 05 | வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் | ஐக்கிய அமெரிக்கா | 1857,000 |
| 06 | U S A டுடே | ஐக்கிய அமெரிக்கா | 1632,000 |
| 07 | நியூயோர்க் டைம்ஸ் | ஐக்கிய அமெரிக்கா | 1230,000 |
| 08 | லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ் | ஐக்கிய அமெரிக்கா | 1138,000 |
| 09 | வொஷிங்டன் போஸ்ட் | ஐக்கிய அமெரிக்கா | 855,000 |
| 10 | நியூயோர்க் டெய்லி நியூஸ் | ஐக்கிய அமெரிக்கா | 769,000 |

சுமார் 232 நாடுகளில் இருந்து கிடைத்த தரவுகளின் அடிப்படையிலேயே மேற்குறித்த தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையை WAN அமைப்பு தயாரித்துள்ளது. உலகெங்கிலும் உள்ள சுமார் 18,000 ற்கும் அதிகமான பத்திரிகை நிறுவனங்கள் இவ்வமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்றன.

-ப.இரஞ்சித் ஜெயகர்


விஜய்

# கடற்கரைக் காட்சி - அகில இலங்கை சித்திரப் போட்டி - 2008

அன்பு பிள்ளைகளே,

கடந்த வருடங்களைப் போலவே இம்முறையும் 'கடற்கரைக் காட்சி' எனும் தலைப்பிலான சித்திரப் போட்டியை அகில இலங்கை ரீதியில் நடாத்துவதற்கு உத்தேசித்துள்ளோம். கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டம் இப்போட்டியை நடத்துகின்றது.

கடற்கரையோரக் காட்சியொன்றை நீங்கள் நேரில் தரிசித்து கண்ட காட்சியாக சித்திரமொன்றை வரைந்து அனுப்பவேண்டும். முட்டையிடுவதற்காக கடற்கரைக்கு வருகின்ற கடல் ஆமைகள், ஆழமற்ற கடற் பகுதிகளில் முருகைக்கற்கள் காணப்படுதல் ஆகியன உள்ளடங்கிய கடற்கரையோர சுவாத்தியத்தை வெளிப்படுத்தும் எந்தவொரு காட்சியையும் சித்திரமாக வரைந்து அனுப்பலாம்.



## போட்டி விதிமுறைகள்

- ★ ஒருவர் ஒரு சித்திரத்தை மாத்திரமே அனுப்ப முடியும்.
- ★ சித்திரத்தின் அளவு 35 செ.மீற்றர்X45 செ.மீற்றர் அளவில் இருத்தல் வேண்டும்.
- ★ எந்தவொரு வர்ணப் பூச்சையும் பயன்படுத்தலாம்.
- ★ ஏற்றுக் கொள்ளப்பட்ட நடுவர் குழுவொன்றினால் பரிசுக்குரிய சித்திரங்கள் தெரிவு செய்யப்படுவதுடன், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகவும் அமையும்.
- ★ சித்திரம் வரையப்படும் தாளின் பின்புறத்தில் போட்டியாளரின் பெயர், வீட்டு முகவரி, பிறந்த தினம், பாடசாலை, பாடசாலை முகவரி, போட்டிப் பிரிவு ஆகியனவும் குறிப்பிடப்படல் வேண்டும்.
- ★ போட்டிக்கு அனுப்பப்படும் சித்திரங்கள் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி ஒப்படைக்கப்பட மாட்டாது.
- ★ போட்டி முடிவுகள் 'விஜய்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

## சித்திரங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

'கடற்கரைக் காட்சி' அகில இலங்கை சித்திரப் போட்டி - 2008
கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டம்,
இல-11, பெரேரா மாவத்தை,
மடகும்புர, பாணந்துறை.

## போட்டி முடிவு திகதி: 2008/செப்டெம்பர்-15 ஆம் திகதி

மேலதிக விபரங்களுக்கு 077-9317619 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும். வெற்றியீட்டப்படும் சித்திரங்களின் உரிமை கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு உரித்துடையதே.

## பரிசளிப்பு விழா

பரிசளிப்பு விழா ஒக்டோபர் மாதத்தில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் கொழும்பில் நடைபெறும்.

## பங்குபற்றக்கூடியோர்

பாலர் வகுப்பு மாணவர்கள்.
ஆரம்பப் பிரிவு 6 ஆம் ஆண்டிற்கு கீழுள்ள மாணவர்கள்.
கனிஷ்ட பிரிவு - 7, 8, 9, 10 ஆம் ஆண்டு மாணவர்கள்.
சிரேஷ்ட பிரிவு - 11, 12, 13 ஆம் ஆண்டு பிரிவு மாணவர்கள்.

## பரிசு விபரம்

அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பணப்பரிசு வழங்கப்படும்.

| பாலர் பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 3,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 2,500.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 2,000.00 |

| ஆரம்பப் பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 5,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 3,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 2,000.00 |

| கனிஷ்ட பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 7,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 5,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 3,000.00 |

| சிரேஷ்ட பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 10,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 7,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 5,000.00 |

**சான்றிதழ்:** ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்படும் சிறந்த சித்திரங்களை வரைந்த நூறு பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் மகா அலெக்ஸாண்டர்

கி.மு 356 இல் இளவரசன் ஒருவன் தோன்றினான். யுத்த தந்திரங்களில் மிகத் திறமைசாலியான அவன் அரிஸ்டோட்டலின் சீடனாவான். உலகத்தையே வெற்றி கொண்டு வீராதி வீரனாகத் திகழ்ந்தான். அவன்தான் மகா அலெக்ஸாண்டர்.

மகா அலெக்ஸாண்டரே உலகிலேயே அலெக்ஸாண்டர் எனும் பெயரில் ஆட்சி புரிந்த அரசர்களில் மிகவும் புகழ்பூத்தவனாகக் கருதப்படுகின்றான். யுத்தம் மூலம் வெற்றி கொண்டு திக்விஜயம் மேற்கொண்ட மகா வீரபுருஷர்களில் ஒருவனாகிய மகா அலெக்ஸாண்டரை மசிடோனியாவின் 3 ஆம் அலெக்ஸாண்டர் (கி.மு 336-323) என்றே அழைப்பர்.

மகா வீரபுருஷராகிய அலெக்ஸாண்டர் முழு உலகையும் தனது கட்டளைக்கு அடிபணிய வைத்திருந்தார். அதுவும் 4 வருடங்கள் எனும் குறுகிய காலத்தில் அவர் உலகை வெற்றி கொண்டார். கி.மு 334 முதல் தனது 33 வயதில் அவரது மரணம் சம்பவிக்கும் வரை மகா அலெக்ஸாண்டர் எனும் அடைமொழியுடன் புகழப்பட்டார். அவர் உலகெங்கும் மேற்கொண்ட படையெடுப்பு பயணத்தில் தான் கைப்பற்றிய அனைத்து பிரதான நகரங்களுக்கும் 'அலெக்ஸாண்ட்ரியா' எனும் தனது பெயரை சூட்டினார். இன்றும் உலக வரைபடத்தில் எகிப்தில் உள்ள இந்த 'அலெக்ஸாண்ட்ரியா' நகரையும் வேறு சில நாடுகளில் உள்ள அலெக்ஸாண்ட்ரியா நகரங்களையும் அடையாளம் காணலாம்.

## அலெக்ஸாண்டரின் தோற்றம்

கி.மு 356 இல் மெசிடன் (Macedon_) நாட்டின் தலைநகரான பெலா (Pella)வில் அலெக்ஸாண்டர் பிறந்தார். மெசிடன் எனும் பெயரில் அழைக்கப்பட்டதுதான் ஹெலாஸ் (Hellas) எனும் அரசு. இன்று கிரீஸ் அல்லது கிரேக்கம் என அழைக்கப்படுவது அன்றைய ஹெலாஸ் அரசையே. அவ்வரசு அலெக்ஸாண்டரின் தந்தையாகிய 2 ஆம் பிலிப் மன்னனின் கீழ் பலம் வாய்ந்த இராச்சியமாகவும் ஐக்கியமடைந்த பெரும் இராச்சியமாகவும் திகழ்ந்தது. அங்கு கலை, இலக்கியம் மற்றும் உயர் தத்துவங்கள் அனைத்தும் நிறைந்து காணப்பட்டன. எனினும், ஒற்றுமையும் ஐக்கிய உணர்வும் இல்லாத காரணத்தால் மோதல்களுடன் காலம் கழிந்தது.

## சிறுவயதில் வீர சாகசம்

சிறு வயதில் அலெக்ஸாண்டர் குதிரைச் சவாரியில் தனது திறமையை வெளிப்படுத்தினார். குதிரைகளுக்கு பயிற்சி கொடுப்பவர்கள் உள்ளிட்ட யாராலும் அடக்க முடியாத குதிரைகளை அடக்கும் வல்லமை அலெக்ஸாண்டரிடம் காணப்பட்டது. இத்திறமைகளை வெளிப்படுத்தி தனது உடல் வல்லமையை வெளி உலகுக்குக் காட்டினார். அத்தகைய குதிரைகளில் புஸ்பெலஸ் (Bucephalus) எனும் குதிரை முக்கியமானது.



இக்காலகட்டத்தில் அலெக்ஸாண்டரின் தந்தையாகிய பிலிப் மன்னன் 13 வயதான தனது மகனுக்கு கல்வி புகட்ட, அக்காலத்தில் கிரேக்க நாட்டின் புகழ்பூத்த மாபெரும் தத்துவ ஞானியான அரிஸ்டோட்டல் (Aristotle) அவர்களை தனது நாட்டிற்கு அழைத்து வந்தார். ஒழுக்கவியல், அரசறிவியல் மாத்திரமல்ல; நவீன விஞ்ஞானம் என அக்காலத்தில் கருதப்பட்ட தாவர விஞ்ஞானம், விலங்கியல் விஞ்ஞானம், புவியியல் விஞ்ஞானம் மற்றும் மருத்துவ விஞ்ஞானம் என்பனவற்றையும் அவர் அரிஸ்டோட்டலிடம் இருந்து கற்றுக்கொண்டார். எனினும், சிறு வயதுள்ள அலெக்ஸாண்டரோ யுத்த தந்திரோபாயங்களை அறிந்து கொள்வதில் பெரிதும் விருப்பத்தைக் காட்டினார். அவர் யுத்த முறைகளையும் யுத்த தந்திரோபாயங்களையும் தனது தந்தையிடம் இருந்தே கற்றுக் கொண்டார்.



## உலக ஆக்கிரமிப்பின் ஆரம்பம்

கி.மு 336 இல் தனது தந்தையின் மறைவிற்கு பின் மெஸிடோனியாவின் மன்னனாக முடிசூட்டும் பொழுது இளவரசன் அலெக்ஸாண்டருக்கு இருபது வயது பூர்த்தியாகி இருந்தது. ஆட்சி பீடமேறியவுடன் தனது முதலாவது நடவடிக்கையாக கிரேக்க நாட்டினுள் நிலவிய கிளர்ச்சியை வெற்றிகரமாக அடக்கினார்.

பாரசீகக் குடாவை கைப்பற்ற வேண்டுமென்ற தந்தை பிலிப் மன்னனின் நீண்டகால விருப்பையும் அது சம்பந்தமாக மிகச் சிறந்த திட்டமொன்றும் அரச பதவியுடன் தந்தையிடமிருந்து மகன் அலெக்ஸாண்டருக்கு உரிமையானது. தந்தையின் கனவை நனவாக்க நினைத்த அலெக்ஸாண்டர் ஆரம்பத்தில் மெஸிடோனியாவிலும் கிரீஸிலும் (Greece) தமது ஆதிக்கத்தை நிலைநாட்டினார்.


அலெக்ஸாண்டர் கைப்பற்றிய பிரதேசங்கள் நாடுகள் சம்பந்தமான வரைபடங்கள் நில அளவீட்டாளர்களால் உருவாக்கப்பட்டதோடு அவை நூற்றுக்கணக்கான வருடங்களாக ஆசியாவின் நிலப்பரப்பை விபரிக்கும் வரைபடங்களாக பயன்படுத்தப்பட்டன.

## அலெக்ஸாண்டரின் நெடும் பயணம்

கி.மு 333 இல் அவர் பாரசீகத்தின் 3 ஆம் டேரியஸ் (Darrius) மன்னனை இஸஸ் (Issus) இல் தோற்கடித்தார். 332 இல் டயர் (Tyre) எனும் இடத்தை அடிபணிய வைத்தார். அத்தோடு நிறுத்தாது அவர் மேலும் தொடர்ந்து முன்னேறினார். அதன்பின் அவர் மிசோர் மற்றும் பாபிலோனியாவை 331 இல் ஆக்கிரமித்து வெற்றி பெற்றார். அதன்பின் மீடியா (Media) வுக்குச் சென்ற அவர் அங்கிருந்து கிழக்குப் பக்கமாகத் திரும்பி மத்திய ஆசியாவை நோக்கித் தனது படை நடவடிக்கைகளை மேற்கொண்டார். இந்திய நாடுகளைக் கைப்பற்றச் சென்ற அவர் இந்து நதியைக் கடந்து பஞ்சாப் வரை தனது அதிகாரத்தை நிலைநாட்டினார். அப்பொழுது அலெக்ஸாண்டரும் அவரது படையினரும் 18,000 கிலோமீற்றர் (11,000 மைல்) தூரம் கடந்திருந்தனர். படையினர் மென்மேலும் முன்னே செல்வதை நிராகரித்த அலெக்ஸாண்டர் விருப்பமின்றி தனது தாய்நாடு திரும்பினார்.



அலெக்ஸாண்டர் பற்றிய திரைப்பட சுவரொட்டி



## மறைவு

மிக நீண்ட யுத்தப் பயணம், தொடர்ச்சியான ஓய்வு ஒழிவில்லாத யுத்த நடவடிக்கைகள், போராட்டங்கள் என்பனவற்றால் பாதிப்படைந்திருந்த அலெக்ஸாண்டர் மீண்டும் தனது தாயகம் திரும்பி வருகையில் அவருக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டது. இக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு கி.மு 323 ஜூன் 13 ஆம் திகதி அலெக்ஸாண்டர் பெபிலன் நகரில் மரணமானார். அவரின் பூதவுடல் தங்கத்தாம்பளத்தில் வைத்து எகிப்தின் அலெக்ஸாண்டிரியா மாநகரில் அடக்கம் செய்யப்பட்டது.

-ப.இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நோர்வே



| | |
|---|---|
| தலைநகரம் | : ஒஸ்லோ |
| பெரிய நகரம் | : ஒஸ்லோ |
| அரச கரும மொழி | : நோர்வேஜியன் மொழி |
| அரசு | : நாடாளுமன்ற ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பு |
| ஜனாதிபதி | : V ஆம் ஹெரல்ட் மன்னன் |
| பிரதமர் | : ஜேன்ஸ் ஸ்டொல்டன்பேர்க் |
| மொத்த நிலப்பரப்பு | : 385,155 சதுர கிலோமீற்றர் |
| சர்வதேச தொலைபேசி இலக்கம் | : +47 |




## தரைத்தோற்றம்

ஸ்கென்டிநேவியன் குடாவில் மேற்குக் கரையோரமாய் அமைந்துள்ள நோர்வே இறைமையுள்ள ஒரு சுதந்திர நாடாகும். அத்துடன் வட ஐரோப்பாவில் அமைந்துள்ள அரசியலமைப்புக்கு உட்பட்ட தன்னாதிக்க அரசாகும். மேற்கு மற்றும் தென் திசையில் நோர்வேஜியன் கடலும் வடக்கே வட கடலையும் ஸ்காகெருக் ஜலசந்தியையும் கிழக்கே சுவீடன், பின்லாந்து, ரஷ்யா ஆகிய நாடுகளையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. பொதுவாக மலைகள், உயர்நிலங்கள், பனிப்படலங்கள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் பல்வேறு இயற்கை அம்சங்கள் நிறைந்த நோர்வேயின் மொத்த நிலப்பரப்பில் 70% மான பிரதேசங்கள் மலைகள், பனிக்கட்டிகள், பனிப்படலம், ஆறுகள் நிறைந்த மனித வாழ்க்கைக்கு தகுதியற்றதாகக் காணப்படுகின்றன.

## மக்களும் மதமும்

நோர்வே மக்களில் பெரும்பான்மையானோர் சுதேச நோர்வேஜியன்களும் பூர்வீக குடிகளும் பிரபுக்களுமாவர். இவர்களைத் தவிர, இங்கு வந்து குடி



யேறிய பாகிஸ்தானியர்கள், ஈராக்கியர்கள், டேனியர்கள், ரஷ்யர்கள், வியட்நாமியர் மற்றும் சுவீடன், மொரோக்கோ போலந்து நாட்டு மக்களும் நோர்வேயில் வாழ்கின்றனர்.

நோர்வே நாட்டு மக்களின் முக்கியமான மதங்களாக புரட்டஸ்தாந்து மதமும் ரோமன் கத்தோலிக்க மதமும் திகழ்கின்றன. இவை தவிர, ஏனைய கிறிஸ்தவ சபைகளைச் சேர்ந்தவர்களும் கணிசமான அளவு உள்ளனர்.



## பிரசித்தம்

நோர்வே, உலகில் செல்வந்த வகுப்பினரை அதிகம் கொண்ட செல்வந்த நாடாகும். உலகில் மானிட அபிவிருத்தி மற்றும் மனித பண்பாட்டு அம்சங்களில் மிக உன்னத இடத்தில் இருக்கும் நாடாகவும் நோர்வே திகழ்கின்றது. அதேபோல் உலகில் சமாதான சூழல் நிறைந்த நாடாகவும் நோர்வே விளங்குவதாக பல்வேறு கணிப்புகள் தெரிவிக்கின்றன.

## வரலாறு

தொல்பொருள் ஆய்வாளர்களின் கணிப்பின்படி, கி.மு 10 ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே இங்கு மக்கள் வாழ்ந்து வருவதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் வட ஜேர்மனி, வட பின்லாந்து அல்லது ரஷ்யாவில் இருந்து இடம்பெயர்ந்து வந்து இங்கு குடியேறியிருக்கலாம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

9 ஆம் நூற்றாண்டில் நோர்வே பல சிற்றரசுகளைப் பிரிந்திருந்தது. இந்த சிற்றரசுகளை ஒன்றிணைத்து ஒரு பேரரசாக உருவாக்கிய பெருமை ஹெரல்ட் பெயாஹெயா என்பவரையே சாரும். கி.பி 872 இல் அவர் நோர்வேயின் முதலாவது அரசராக முடிசூட்டப்பட்டார்.



அதன் பின் கி.பி 1015 இல் ஹெரல்ட் மன்னனின் மகன் II ஆம் ஒலாப் மன்னன் இந்நாட்டின் முதலாவது அதிகாரம் மிக்க மன்னனாக நியமிக்கப்பட்டதோடு அவரின் ஆட்சிக் காலத்தில் மக்களிடையே கிறிஸ்தவ மதத்தைத் தாபிக்க பெரும்பங்காற்றினார். இந்த யுகத்தில் நோர்வேயில் கலாசார அம்சங்கள் நாட்டினுள் சிறிது சிறிதாக வளர்ச்சி அடைந்தன. கி.பி 1442-1814 வரை நோர்வேயின் ஆட்சி நிர்வாகம் டென்மார்க் அரசனால் நிர்வகிக்கப்பட்டது. 1814 இல் நோர்வே நாடு சுவீடன் நாட்டுடன் ஒன்றிணைந்தது. 1905 இல் நோர்வே நாடாளுமன்றம் சமாதானமாக சுவீடனில் இருந்து பிரிவதற்கு நடவடிக்கை மேற்கொண்டதோடு, நோர்வேயின் அரச கிரீடத்தை பொறுப்பெடுப்பதற்கு VII வது ஹாகோன் மன்னனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

முதலாம் உலக யுத்தத்தின் போது நடுநிலை நாடாக செயல்பட்ட நோர்வே, இரண்டாம் உலக யுத்தத்தின் போது அதாவது 1940 ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி ஜேர்மன் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டது. அதன்பின் ஜேர்மனியின் நாசிப் படையினரால் அதன் நிர்வாகம் முற்றுமுழுதாக கைப்பற்றப்பட்டதோடு நாசித் தலைவர் வைட்குன் குஸ்லின் நாட்டின் பிரதமரானார்.



1945 மே மாதம் வரை ஜேர்மனிய இராணுவம் நோர்வேயில் நிலை கொண்டிருந்தது. 1945 ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி பிரதமர் வைட்குன்னுக்கு நோர்வே மக்கள் சட்டபூர்வமாக மரண தண்டனை வழங்கினர். அதன் பின் நோர்வே சோசலிச ஜனநாயக நாடானது.

## பொருளாதாரம்

நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 3/4 பகுதி முற்றிலும் வளமற்ற நிலமாகும். மிகுதி நிலப்பரப்பில் 4% அளவிலான மிகக் குறைந்த நிலப்பரப்பிலேயே விவசாயம் செய்யப்படுகின்றது. உணவுப் பொருட்களில் 50% க்கும் அதிகமான அளவு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. நோர்வே மக்கள் தமது நாட்டின் மலைப் பிரதேசங்களில் மாடுகளையும் ஆடுகளையும் வளர்க்கின்றனர். இந்நாட்டின் நிலப்பரப்பில் 1/4 பகுதி காடுகளாக இருப்பதால் இதுவே நாட்டின் பிரதான இயற்கை வளமாக இருக்கிறது. ஆகவே, கைத்தொழில் துறையில் மரங்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. மீன்பிடிக் கைத்தொழிலும் அவர்களின் முக்கிய வருவாய்த்துறை ஆகும்.

* **ஏனைய முக்கிய கைத்தொழில்கள்:** பெற்றோலியம், இயற்கை வாயு உற்பத்தி, கப்பல் கட்டும் கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கை என்பன.
* **சிறிய உற்பத்திகள்:** இரும்புருக்கு, செம்பு, டைடேனியம், நிலக்கரி, சிங்க், லேட், நிக்கல் மற்றும் அலுமினியம் ஆகியவை.
* **பிரதான பொருளாதார நடவடிக்கைகள்:** உணவுப் பொருள் உற்பத்தி, கடதாசி, மின்-இரசாயனம், மின் உலோகக் கைத்தொழில், கப்பல் தொழில் என்பன.
* **முக்கிய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் நாடுகள் :** பிரித்தானியா, ஜேர்மனி, சுவீடன், நெதர்லாந்து, டென்மார்க் மற்றும் ஐக்கிய அமெரிக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்டெம்பரில்....




## பூத்துக் குலுங்கிக் காய்க்கும் மரங்கள்

**பூக்கள்**

- செம்மல்லிகை - *Murraya paniculata*
- விடியல் ஒளி - *Ipomoea pirpurea*
- காட்டுக் கராம்பு - *Syzygium fergusoni*
- புரட்டாதி மலர் - *Exacum trinervium*

**பழங்கள்**

- விளாம்பழம் - *Limonia acidissima*
- தூரியன் - *Durio zibethinus*
- மெங்குஸ்தான் - *Garcinia mangostana*

**செப்டெம்பர், 'க்ரகரியன்' நாட்காட்டியில் ஒன்பதாவது மாதமாகும். லத்தீன் மொழியில் 'செப்டெம்' என்பது 'ஏழு' என்றும் 'செப்டிமஸ்' என்பது 'ஏழாவது' என்றும் அர்த்தப்படுகின்றது. கி.மு 153 காலப் பகுதி வரை ரோமானிய நாட்காட்டியின் படி ஏழாவது மாதமாக செப்டெம்பர் கருதப்பட்டு வந்தது.**

தமிழ் வருடக் கணக்கின்படி, இம்மாதம் 'புரட்டாதி' என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. சிங்கள வருடக்கணக்கில் 'பினர' என்று இம்மாதம் பெயர் கொண்டுள்ளது.

செப்டெம்பர் மாதத்திற்குரிய அதிர்ஷ்டக் கல்லாக நீலக்கல்லும் (Sapphire) இம்மாதத்திற்கே உரிய மலராக 'விடியல் ஒளி' பூவும் சிறப்பித்துக் கூறப்படுகின்றன.

இம்மாதத்தின் 8 ஆம் திகதி சர்வதேச பத்திரிகையாளர் தினமாகவும் 16 ஆம் திகதி சர்வதேச ஓசோன் படை பாதுகாப்புத் தினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், 21 ஆம் திகதி சர்வதேச சமாதான தினமாகவும் 24 ஆம் திகதி சர்வதேச காது கேளாதோர் மற்றும் இதயநோய் நிவாரண தினமாகவும் 27 ஆம் திகதி உலக சுற்றுலாத்துறை தினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

**நீலம் மற்றும் பச்சை நிறம் கலந்த வண்டுக் குருவிகள் கூட்டமாக நகரை அண்டிய பகுதிகளில் அதிக சத்தமிட்டுக் கீச்சிட்டவாறு பறந்து திரிவதை அவதானிக்கலாம்**

### காலநிலை

செப்டெம்பர் மாதத்தின் 3 வாரங்கள் நிறைவடைவதோடு தென்மேற்குப் பருவ மழைக்காலம் முடிவடையும். அதனைத் தொடர்ந்து உள்நாட்டு 'மொன்சூன்' பருவமழை ஆரம்பமாகும். மத்திய, கிழக்கு, மேற்கு மற்றும் ஊவா மாகாணங்களின் சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் அதிக வெப்பநிலை நிலவும். நாட்டின் தென்மேற்குத் திசையினூடாக நாட்டினுள் காற்று வீசக்கூடும்.

### உடுத்தொகுதிகள் அவதானிப்பு

இரவு8.00மணியளவில் துலாம், விருட்சிகம், தனுசு, மகரம், கும்பம், பெரிய கரடி போன்ற உடுத்தொகுதிகளையும் அதிகாலை 4.00 மணியளவில் மகரம், கும்பம், மீனம், வேட்டைக்காரன், கெசியோபியா போன்ற உடுத்தொகுதிகளையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.


### சுற்றுலாப் பறவைகளின் வருகை

வட இந்தியாவிலிருந்து இலங்கையை நோக்கி வரும் அழகிய இரண்டு சுற்றுலாப் பறவையினங்களான வண்டுக்குருவி, நீண்டவால் கொண்டைக்குருவி என்பன இம்மாதத்தில் எமது நாட்டில் சஞ்சரித்துத் திரிவதைக் காணலாம். நீலம் மற்றும் பச்சை நிறம் கலந்த வண்டுக்குருவிகள் கூட்டமாக நகரை அண்டிய பகுதிகளில் அதிக சத்தமிட்டுக் கீச்சிட்டவாறு பறந்து திரிவதை அவதானிக்கலாம்.


அது போன்று வெள்ளை நிற உடலையும் கறுப்பு நிறத் தலையையும் நீண்ட வாலையும் உடைய நீண்ட வால் கொண்டைக் குருவிகளையும் காணலாம். இதன் பெண் பறவையின் உடல் வெள்ளை மற்றும் கபில நிறம் கலந்திருக்கும். அவை ஆண் பறவையிலும் சற்று குட்டையான கபில நிற வாலைக் கொண்டிருக்கும். இவற்றை வீட்டுச் சூழலில் அதிகம் கண்டு கொள்ளலாம்.

-ஜீநு


வண்டுக்குருவி


விளாம்பழம்


துலாம்


நீலக்கல்


விடியல் ஒளி பூ

60 நாட்களில் தபால் மூல ஆங்கில பாடநெறி
இதோ மீண்டும் இலவச டீசேட் ஒன்றை பெறும் வாய்ப்பு
இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி
English Language யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC/SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்த தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.
60 நாட்களில் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்றும்
FREE FREE இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
* இலவச 30 days Easy Way English Book Part1
* இலவச அழகிய டீசேட் ஒன்று
இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
பாடநெறியில் இணைய வயது கட்டுபாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பு எதிர்பார்க்கும், இல்லத்தரசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.
மேலதிக விபரங்களுக்கு 10/- பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-5615561, 0777-220002

PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முதலாவது உலகளாவிய வலைப்பின்னலை பரிசீலித்துப் பார்த்த விஞ்ஞானிகள்

# உலகையே சுருக்கிய தகவல் வ

உலகத்தை ஒரு குக்கிராமமாக மாற்றியதில் இணையத்திற்கு (Internet) பெரும்பங்கு உண்டென்றால் அதை மறுப்பதற்கில்லை. 'உலகளாவிய வலைப்பின்னல்' எனக்கூறப்படும் world wide web (www) உருவாக்கம் பெற்று 17 ஆண்டுகள் கழிந்துவிட்டன. Web என்பது வலைப்பின்னல் என்ற கருத்தை வெளிப்படுத்துகின்றது.

உலகம் பூராகவும் தகவல்களை வழங்கும் இணையத்தளங்களை (websites) இணைத்து web என்ற பெயர் வழங்கப்பட, இவை யாவும் தகவல்களை வழங்கும் வலைப்பின்னலாகக் காணப்படுவதே காரணமாகும். உங்களுக்கு வேண்டிய தகவல்களை மிகக் குறுகிய நேரத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய சாத்தியங்களை இணையம் உங்களுக்கு வழங்கத் தயார் நிலையில் காணப்படுகின்றது.

## துளித் துளியாக

பேராசிரியர் டிம் பேர்னர்ஸ் லீ என்பவரே உலகளாவிய வலைப்பின்னலின் ஸ்தாபகராவார். இவரே 'இணையத்தின் தந்தை' என்ற சிறப்புப் பெயராலும் இனங்காணப்படுகின்றார். அந்தவகையில் நாம் உங்களை 1991 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 06 ஆம் திகதிக்கு பின்னோக்கி அழைத்துச் செல்கிறோம். அன்றைய தினம் முற்பகல் வேளையில்தான் உலகளாவிய வலைப்பின்னல் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உலகளாவிய வலைப்பின்னலை அறிமுகம் செய்து வைத்த டிம் பேர்னர்ஸ் லீ, உலகளாவிய வலைப்பின்னலை "இது கணினியின் தீவாகும்" என்று குறிப்பிட்டதும் இங்கு நினைவு படுத்தத்தக்கது. சாதாரணமாக 2,000,000 தகவல்களை வெறும் 10 செக்கன்களில் பெற்றுக் கொள்ளும் வசதியை இந்தத் தொழில்நுட்பம் வழங்குகின்றது. வரலாறு, அறிவியல், செய்தி, நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் என அனைத்தையுமே இணையத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடிவது அதிசயமான உண்மையாகும்.

## சில மைல்கல்கள்

### 1991


இவ்வாண்டு ஒகஸ்ட் 06 இல், பேராசிரியர் டிம் பேர்னர்ஸ் லீ, முதன்முறையாக World Wide Web (WWW) என்ற உலகளாவிய வலைப்பின்னலை அறிமுகம் செய்து வைத்தார். ஜெனீவா நகரில் அமைந்துள்ள CERN கணினி ஆய்வகத்திலேயே இதன் வெள்ளோட்டம் இடம்பெற்றது. இதேவேளை, வட அமெரிக்காவின் ஸ்டென்போர்ட் பல்கலைக்கழகத்தில் இந்த இணையத்தளம் கணினி மூலம் இணைப்பு ஏற்படுத்தப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. இதன் பிற்பாடு, அது உலகளாவப் பரந்து விரிந்த ஒரு சேவையாக மாறியது.

அவ்வாறே, டிசம்பர் 12 ஆம் திகதியில் முதன் முறையாக ஐரோப்பாவிற்கு வெளியே உலகளாவிய வலைப்பின்னல் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டன.

### 1993

'மொசய்க்' (Mosaic) என்ற இணைய உலாவி (Web browser) 1993 ஏப்ரலில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இதன் மூலம், உலகளவில் இணையத்தை பிரபல்யம் அடையச் செய்வதற்கு அவசியமான தொழில்நுட்ப உதவிகள் பெறப்பட்டன. இந்த இணைய உலாவியை அறிமுகம் செய்ததன் பலனாக, உலகில் எந்தப் பகுதியிலுள்ளவர்களும் இணையத்தளங்களுக்குள் இலவசமாக நுழைந்து கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. இதனடிப்படையில், 1993 ஏப்ரல் 30 ஆம் திகதி பேராசிரியர் பேர்னர்ஸ் லீ யின் கட்டுப்பாட்டில் காணப்பட்ட CERN கணினி விஞ்ஞான ஆய்வகம் ஊடாக உலகளாவிய வலைப்பின்னலுக்கு இலவசமாகவே நுழைய முடியும் என அறிவிப்புச் செய்யப்பட்டது. இந்த அறிவிப்பால் WWW என்ற மூன்று எழுத்துக்களும் தகவல்களைப் பெறும் சாத்தியத்தில் மிகப்பெரும் புரட்சியை ஏற்படுத்தியதெனலாம்.


நொவெம்பர் மாதமளவில் முதன்முறையாக Webcamera பாவனைக்காக அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி, 1993 இற்குப் பிறகு உலகின் எந்தவொரு மூலையில் இருக்கும் நபரும் வேறோர் இடத்திலிருக்கும் நபருடன் நேரடியாக 'வீடியோ' மூலம் தொடர்பு கொள்ளக்கூடிய சாத்தியங்கள் உருவாகின. அத்தோடு, ஒலியும் கேட்கும். காட்சியும் தோன்றும். இதனையடுத்தே, உலகம் இவ்வளவு சிறியதா என எண்ணத் தோன்றியது. இதிலிருந்தே 'உலக குக்கிராமம்' என்ற தொலைத்தொடர்பாடல் எண்ணக்கரு தோற்றம் பெற்றது எனலாம்.


உலகளாவிய வலைப்பின்னலின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு நிர்மாணிக்கப்பட்ட தூபி

### 1994

1994 பெப்ரவரியில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற்கு 'வெப் கெமரா' அறிமுகம் செய்யப்பட்டது. இதன் மூலம் ஆராய்ச்சி முடிவுகளை உலகளவில் உடனுக்குடன் வெளிப்படுத்தும் சாத்தியங்கள் தோன்றின. இதே ஆண்டின் ஏப்ரலில் பிரித்தானியாவின் வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றின் ஒலி, ஒளிபரப்புகளுக்காக முதன்முறையாக இணையத்தளங்கள் பாவனைக்கு உட்படுத்தப்பட்டன. இந்தக் காலகட்டத்தில் ஸ்டென்போர்ட் பல்கலைக்கழகத்தின் டேவிட் பிலோ மற்றும் ஜெரி ஜேன்க் ஆகியோர் Yahoo என்ற இணையத் தேடற்பொறியை உருவாக்கி, அறிமுகம் செய்தனர். இது முதன்முதலில்


உலகளாவிய வலைப்பின்னலின் உருவாக்கத்திற்காக முதலில் பயன்படுத்தப்பட்ட உபகரணம்


உலகளாவிய வலைப்பின்னல் தொடர்பான ஆய்வுப் பத்திரத்தின் குறிப்பொன்று

'ஜெரியின் உலகளாவிய வலைப்பின்னல்' என்ற
டன் மிகப் பிரபல்யமாகவும் வினைத்திறன் மிக்க
அவ்வாறே, ஒக்டோபர் 13 இல் அமெரிக்கா ஜ
இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இ
gov என்ற இணையத்தள முகவரியின் மூலம் இ

### 1995

பெப்ரவரி மாதமளவில் ரேடியோ H.K, முதன்
அறிமுக நிகழ்வாக இணையத்தின் மூலம் மக்க
சேவையை ஆரம்பித்தது. இது Net Radio என
ஜூலை மாதம் உலகளாவிய வலைப்பின்னல
நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது.
மாதம் முதலாம் திகதி 'அமேசன் இணையத்தள
பட்டது. இதன்மூலம் உங்களுக்குத் தேவையான
மூலம் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ள முடி
குள் நுழைதல் என்பது, புத்தகக் கடையொன்றுக்
தரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இ
cadabra.com என்ற பெயரில் இனங்காணப்ப
ஜெப் வெஸோஸ் என்பவரால் அறிமுகம் செய்து
களை விற்பனை செய்யும் பிரதான விற்பனையா
களை சாத்தியமாக்குகிறது. மேலும், இசை இறுவ
உபகரணங்கள், உணவுப் பொருட்கள், வீட்டு உ
யும் விற்பனை செய்து கொள்ள இந்த இணைய
1995 ஒகஸ்ட் மாதமளவில் உ...ல் காணப்ப
ணிக்கை 18,957 ஆகக் காணப்ப...து. இதுவ
டிக்கைகள் யாவும் உலகளாவிய வலைப்பின்னல
களோடு நெருக்கமாயின. இதே ஆண்டு செப்
பனைகளுக்காகவும் இணையத்தளங்கள் பாவன
றில் "eBay' என்ற இணையத்தளமானது, ஏல
நிலைகளை வழங்கியுள்ள முன்னணி இணைய
நாளைக்கு ஆயிரத்திற்கு
இந்த இணையத்தளத்
ஏலத்தில் வ
பியர் ஒமிட்யர் என்பவரால் இந்த இணையத்த
வைக்கப்பட்டது. இதனூடாக உடைந்த லேசர் க
அமெரிக்க டொலருக்கு முதன்முதலாக ஏல விற்

### 1996

1996 ஒகஸ்ட் மாதமளவில் இணையத்தில் 3,
காணப்பட்டன.

### 1997

1997 மார்ச் மாதத்தில் BBC நிறுவனம், பிரித்
பொதுத்தேர்தலின் பெறுபேறுகளை வெளியிடு
இணையத்தளத்தைப் பாவித்தது. இதுவே, தேர்
இணையத்தளம் பாவிக்கப்பட்ட முதற்தடவைய

### 1998

1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் தி
இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டது. ஜோசப் ப
என்ற வங்கி ஊழியர்களால் இந்த இணையத்தள
மூலம் 280 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வ
களை அதிகரித்துக் கொள்ள முடிந்தது. எனினும்
இணையத்தளம் செயலிழந்து போனது.
இதனை அடுத்து 1998 செப்டெம்பர் மாதம் எ
தின் லெரி பேஜ் மற்று சர்ஜே பிரின் என்பவர்கள
உருவாக்கப்பட்டது. கூகிள் (Google) என்றால்,
களைத் தேடிப் பெறுதல்' என்று பொருளாகி வி
பொறியென்பதும் இதன் மூலம் பல்வேறுபட்ட இ
இணைப்புகள் ஏற்படுத்திக் கொள்வது சாத்திய
தக்கது. இது 1998 செப்டெம்பர் மாதம் உலகளா
உலகளவில் பயன்படுத்துவது சாத்தியமாக்கப்ப
'Googol' என்றே முதன்முதலில் பெயரிடப்பட்
யதில் ஏற்பட்ட பிழையால் Google எனப் பெய
பொறியை தினமும் பில்லியனுக்கும் அதிகமாக

### 1999

Napster என்ற பெயருடைய கோப்பு பரிமாற்
தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. சோவ்
முறைமை அறிமுகம் செய்யப்பட்டது. இவர் முத
பொன்றை பரிமாற்றம் செய்வதில் வெற்றி கண்ட
னது, 1999 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம்
வெளியிட்டு வைக்கப்பட்டது. இது ஒலிப்பதிவு
களின் வரவேற்பைப் பெரிதும் பெற்றுக் கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைப்பின்னல்

பின்னல்' என்ற பெயரில் இனங்காணப்பட்டது
னத்திறன் மிக்கதாகவும் அமைந்திருந்தது.
அமெரிக்கா ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ
டது. இந்த இணையத்தளமானது, whitehouse.
ரியின் மூலம் இனங்காணப்பட்டது.

### 1995

பா H.K, முதன்முறையாக-தற்காலிகமாக-
ன் மூலம் மக்களிடையே வானொலி ஒலிபரப்பு
Jet Radio என பெயர் பெற்றது.
வலைப்பின்னலானது, பொருட்களின் விற்பனை
டுத்தப்பட்டது. 1995 ஆம் ஆண்டு ஜூலை
இணையத்தளம்' (amazon.com) ஆரம்பிக்கப்
ந்த் தேவையான புத்தகத்தை இணையத்தின்
க் கொள்ள முடியும். இந்த இணையத்தளத்திற்
கடையொன்றுக்குச் செல்லும் ஓர் அனுபவத்தை
மும் இல்லை. இந்த இணையத்தளம் முதலில்
இனங்காணப்பட்டதோடு, 1994 ஆம் ஆண்டு
அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இது புத்தகங்
ன விற்பனையாளர்களை இணைக்கும் நிலை
பும், இசை இறுவட்டுகள் (CD), இலத்திரனியல்
ட்கள், வீட்டு உபகரணங்கள் என அனைத்தை
இந்த இணையத்தளம் பயன்படுத்தப்படுகின்றது.
ல் காணப்ப இணையத்தளங்களின் எண்
து. இதுவ ல் பங்குச் சந்தையின் நடவ
வலைப்பின்னலின் அங்கமான இணையத்தளங்
ஆண்டு செப்டெம்பர் மாதமளவில் ஏல விற்
ளங்கள் பாவனை செய்யப்படலாயின. இவற்
ளமானது, ஏல விற்பனைக்காகவே தனது
ாணி இணையத்தளமாகும். ஒரு
ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொருட்கள்
ணையத்தளத்தின் மூலம்
ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.
த இணையத்தளம் அறிமுகம் செய்து
டைந்த லேசர் கதிர் சாதனமொன்றை 14.83
தலாக ஏல விற்பனை செய்ய முடிந்தது.

### 1996

ணையத்தில் 3,42,081 இணையத்தளங்கள்

### 1997

நிறுவனம், பிரித்தானியாவில் இடம்பெற்ற
ளை வெளியிடுவதற்காக, அந்நிறுவனத்தின்
இதுவே, தேர்தல் நடவடிக்கைளுக்காக
முதற்தடவையாகக் கருதப்படுகிறது.

### 1998

தம் முதலாம் திகதி kozmo.com என்ற
டது. ஜோசப் பார்க் மற்றும் ஜோன்க் கேன்ங்
இணையத்தளம் உருவாக்கப்பட்டது. இதன்
டொலர்கள் வரை அந்நிறுவனத்தின் பங்கு
ந்தது. எனினும், 2001 ஆம் ஆண்டில் இவ்
ானது.
டம்பர் மாதம் ஸ்டென்போர்ட் பல்கலைக்கழகத்
ின் என்பவர்களால் 'கூகிள்' இணையத்தளம்
ogle) என்றால், 'கணினியின் மூலம் தகவல்
பொருளாகி விட்டது. இது ஒரு சிறந்த தேடற்
பல்வேறுபட்ட இணையத் தளங்களிற்கு
ர்வது சாத்தியமாக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்
மாதம் உலகளாவிய வலைப்பின்னல் மூலமாக,
த்தியமாக்கப்பட்டது. இந்த தேடற்பொறியானது
பெயரிடப்பட்டது. ஆனாலும், எழுத்துக்கூட்டி
gle எனப் பெயர் மாற்றப்பட்டது. இந்தத் தேடற்
கும் அதிகமானோர் பயன்படுத்துகின்றனர்.

### 1999

கோப்பு பரிமாற்றல் முறைமை 1999 மே மாதத்
ட்டது. சோவ்ன் பேனின் என்பவரால் இந்த
டது. இவர் முதன்முதலாக mp3 கோப்
வெற்றி கண்டார். இந்த நிகழ்ச்சித்திட்டமா
மாதம் முதலாம் திகதி உத்தியோகபூர்வமாக
து ஒலிப்பதிவுத்துறையில் நாட்டம் கொண்டவர்
பற்றுக் கொண்டது. அதேவேளை, புலமைச்
சொத்துகள் தொடர்பான ஊழல்களுக்காக இந்த கணினி செய்நிரல் பாவிக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டன. இதனால், சட்டரீதியான வழக்குகளிலும் பேனின் மாட்டிக் கொண்டார். நீண்ட கால சட்ட நடவடிக்கைகளுக்குப் பின்னர் 2001 ஜூலை மாதம் இந்தச் சேவை மூடப்பட்டது.

இன்றளவில் பாவிக்கப்படும் கோப்பு பரிமாற்ற முறை, டொம் அன்டர்சன் என்பவரால் உருவாக்கம் செய்யப்பட்டதாகும். இதனை உருவாக்கும் பொருட்டு 580 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதே ஆண்டின் நொவெம்பர் மாதமளவில் அர்னஸ்ட் மெல்மஸ்டன் என்பவரால் Boo.com என்ற இணையத்தளம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இந்த இணையத்தளத்தின் மூலம் பல்வேறு வகையான அலங்கார ஆடையணிகள் விற்பனை செய்யப்பட்டன. இந்தத் தளத்தின் பலவீனமான வடிவமைப்பு தொடர்பாக பல விமர்சனங்கள் எழுந்ததும் குறிப்பிடத்தக்கது. இங்கு முப்பரிமாண ஆக்கங்கள், மெய்நிகர் நிலைகள் மூலம் பல விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. ஆனாலும் 2000 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி இந்த இணையத்தளமும் செயலிழந்து போனது.

### 2000

2000 ஒகஸ்ட் மாதமளவில் சுமார் 20 மில்லியன் இணையத்தளங்கள் உருவாக்கம் பெற்றிருந்தன.


### 2001

செப்டெம்பர் மாதம் Google தேடற்பொறிக்கு Patent அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெற்றது.

### 2003

ஏப்ரல் மாதத்தில் இசைக் கோப்புகளை கணினிக்கு பதிவிறக்கம் (download) செய்து கொள்ளும் மென்பொருள் உருவாக்கப்பட்டது.





பேராசிரியர் பேர்னர்ஸ் லீ


மே மாதமளவில் அசாதாரணமான விடயங்களைச் செய்வதற்கு ஆர்வமானவர்களிடையே கலந்துரையாடலை ஏற்படுத்திவிடும் மென்பொருளொன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இதில் முதன்முதலாக 100 பேரிடையே கருத்துகளை பரிமாறிக் கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

### 2007

உலகளாவிய இணையத்தில் சுமார் 100 மில்லியன் இணையத்தளங்கள் காணப்படுவதாக Netcraft என்ற அமைப்பு அறிவித்தது.

### 2008

இணையத்தின் இணையற்ற தகவல் பொக்கிஷமாக விளங்கும் கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிபீடியாவிற்குப் (Wikipedia) போட்டியாக, கூகிள் நிறுவனத்தின் மூலம் Knol என்ற பெயரில் புதிய இணையச் சேவையொன்று ஜூலை மாதம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இது இணையக் கலைக்களஞ்சியமாக தொழிற்படவுள்ளது.


உலகளாவிய தகவல் வலைப்பின்னலின் பரவல்

### உருவாக்கியவர் பற்றி....

| | |
|---|---|
| பெயர் | : திமோதி டிம் ஜோன் பேர்னர்ஸ் லீ |
| பிறப்பு | : 1955 ஜூன் மாதம் 5 ஆம் திகதி லண்டன் |
| தந்தை | : கொன்வே வர்னர்ஸ் லீ |
| தந்தையின் தொழில் | : கணிதவியலாளர் |
| தாய் | : மேரி லீ வூட்ஸ் |
| தாயின் தொழில் | : கணிதவியலாளர் |
| முதலாவது பட்டப்படிப்பு | : Oxford பல்கலைக்கழகம் |
| மனைவி | : ஜேன் லீ |
| முதலாவது தொழில் | : பேலி தொலைத்தொடர்பாடல் நிறுவனத்தின் கணினி செய்நிரல் தொகுப்பாளர். (1976) |

-தாரிக் அஸீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனைக்கு....

* பேசிய பின் சிந்திப்பதைவிட பேச முன் சிந்திப்பதே மேல்.
* அன்பு உன் நெஞ்சில் இருந்தால் அழகு உன் முகத்தில் இருக்கும்.
* நாம் வாழப்போவதோ சில காலம். அதற்குள் நல்லதைச் செய்து வாழ்ந்து விடுவோம்.
* மனிதன் இரு வகைப்படுகின்றான். ஒருவன் இருளில் வாழ்கின்றான். மற்றவன் ஒளியில் தூங்குகின்றான்.
* பொறாமையை விட்டுவிடுங்கள். ஆரோக்கியமான போட்டியை வளர்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால், அது உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

தொகுப்பு:
எஃப்.ரிப்கா ரஹ்மான்,
உலப்பனை.

# நற்சான்று எதற்கு?

லட்சுமணனும் முத்தையாவும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது கணபதி என்பவன் ஓடி வந்து லட்சுமணனிடம் "ஐயா! நான் பெரிய சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறேன். நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். எனக்கு



அவசரமாக ஆயிரம் ரூபா கொடுத்து உதவுங்கள். இரண்டு வாரத்துக்குள் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்றான். லட்சுமணன், "கணபதி! நீ எனக்குத் தெரிந்தவன்தான். ஆனால், பண விஷயம் பார்.. யாராவது உனக்காக வாக்குறுதி அளித்தால் உனக்குக் கடன் கொடுக்கிறேன்" என்று கூறியவாறே முத்தையாவைப் பார்த்தார்.

முத்தையா லட்சுமணனிடம், "இவனை நம்பி லட்சம் ரூபா வேண்டுமானாலும் கொடுக்கலாம். வாக்குத் தவறாதவன். நான் சொல்கிறேன். இவனுக்கு கடன் கொடுங்கள்" என்றான். அது கேட்டு லட்சுமணன் கணபதியைத் தன் வீட்டிற்கு அழைத்துப் போய் ஆயிரம் ரூபா கொடுத்து அனுப்பினார்.

மறுநாள் முத்தையா லட்சுமணனைச் சந்தித்தபோது, "என்ன! அந்த கணபதிக்கு கடனாகப் பணம் கொடுத்து விட்டீர்கள் போலிருக்கிறது. இனிமேல் உங்கள் பணம் எங்கே வரப் போகிறது" என்றான். அதற்கு லட்சுமணன் அதிர்ச்சியடைந்து, "நேற்று அவன் நேர்மையானவன் என்று ஏன் கூறினீர்கள்?" என்று கோபத்தோடு கேட்டார். முத்தையாவும் சிரித்துக் கொண்டே, "இந்தக் கணபதி இரண்டு வருடங்களுக்கு முன் என்னிடம் நூறு ரூபா கடன் வாங்கி இருந்தான். ஆனால், நேற்று வரை திருப்பிக் கொடுக்கவில்லை. நேற்று அவன் கடன் கேட்டபோது, நான் உங்களைக் கொடுக்கச் சொல்லி அவன் உங்கள் வீட்டிலிருந்து பணத்தோடு வந்த போது என் கடனை வசூலித்து விட்டேன்" என்றான்.

லட்சுமணன் சிலை போலானார்.

சி.அகல்யா,
யா/இந்து மகளிர் கல்
யாழ்ப்பாணம்.





## பொன் மொழிகள்

* இதயம் இறைவன் பால் இருக்க, கைகள் வேலையைச் செய்து கொண்டே இருக்க வேண்டும்.
* ஞானம் என்பது மனிதனிடத்தில் இயல்பாக இருப்பதாகும். எந்த ஞானமும் மனிதனுக்கு வெளியே இருந்து வருவதில்லை.
* அறிவுதான் வாழ்வு, அறியாமை மரணம்.
* ஆற்றலின் உயர்ந்த நிலை, அமைதியாக நிலைகுலையாமல் இருப்பதுதான்.
* அன்பிற்காக அன்பு செய்ய அன்பே வழி.
* எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இன்பமளிக்கும் பொருள், உலகத்தில் இல்லவே இல்லை.
* எளியவர்களின் மருந்து, மன உறுதி ஒன்றுதான்.
* உனக்குப் பிடித்ததை நீ கடைப்பிடி. அது போலவே மற்றவர்கள் தங்களுக்கு விருப்பமானதைப் பின்பற்ற விடு.
* கடவுள் சொர்க்கத்தைப் படைத்தான். மனிதன் தனக்குத் தானே நரகத்தைப் படைத்துக் கொண்டான்.
* மற்றவர்களுக்கு வழிகாட்டும் போது, வேலைக்காரனைப் போல நடந்து கொள்.


தொகுப்பு: அ.க.அப்துல் றஷீத்,
மட்/அல்ஹிதா ம.வித்.,

## தந்தையர்கள்

* விஞ்ஞானத்தின் தந்தை - கலிலியோ கலிலி
* சோசலிசத்தின் தந்தை (கம்யூனிசம்) - கார்ள் மாக்ஸ்
* கேத்திர கணிதத்தின் தந்தை - பைதகரஸ்
* கம்ப்யூட்டரின் (கணினி) தந்தை - சார்ள்ஸ் பபேஜ்
* மருத்துவத்தின் தந்தை - கிப்போகிரட்டிஸ்
* உளவியலின் தந்தை - சிக்மண்ட் பிராய்ட்
* ஆயுள்வேத மருத்துவத்தின் தந்தை - சாரகா
* கெரில்லாப் போராட்டத்தின் தந்தை - சேகுவேரா
* அரசறிவியலின் தந்தை - அரிஸ்டோட்டில்
* வரலாற்றின் தந்தை - கெரோடற்ஸ்
* சொற்பொழிவின் தந்தை - டெமாஸ்தனீஸ்
* நவீன ஓவியத்தின் தந்தை - பிகாசோ
* ஜனநாயகத்தின் தந்தை - ஜீன் ஐக் ரூசோ


அரிஸ்டோட்டில்


சார்ள்ஸ் பபேஜ்


கார்ள் மாக்ஸ்


சேகுவேரா

எம்.ஜீவநேசன், நு/பாமஸ்டன் த.வித்., தலவாக்கலை.

## தெரிந்து கொள்வோம்

* ஒருவர் தானே தன்னைப் பற்றி எழுதும் வரலாறு -சுயசரிதை
* ஒருவர் பிறந்து மறையும் வரையுள்ள காலம் -தலைமுறை
* கடவுள் இருக்கிறார் என்று நம்புகின்றவன் - ஆத்திகன்
* கடவுள் இல்லை என்று நம்புகின்றவன் - நாத்திகன்
* ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் -சகபாடி
* தாய் தந்தையரை இழந்தோர் -அநாதை
* வைத்தியர் உதவி இன்றி தாமே தமக்குச் செய்யும் மருந்து -கைமருந்து
* மனைவியை இழந்தவன் - தபுதாரன்

தொகுப்பு: முஹம்மட் சாதிர்,
அக்/முஸ்லிம் ஆண்கள் வித்., அக்கரைப்பற்று.

படத்தை
இங்கே
ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:..........................................

முகவரி:..........................................

..........................................

பாடசாலை:..........................................

வகுப்பு:..........................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 2103

க.திலக்ஷன்,
தரம் - 2,
சென்.ஜோன்ஸ் கல்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல : 2104

க.தமிழ்ச்செல்வன்,
தரம் - 9C,
அச்சுவேலி மத்திய கல்.,
அச்சுவேலி.



அங்.இல : 2105

நி.நிரஞ்சன்டனி,
தரம் - 8C,
புனித மிக்கேல் கல்.,
மட்டக்களப்பு.



அங்.இல : 2106

தி.கனகேஷ்வரி,
தரம் - 11A,
சௌதம் த.ம.வித்.,
தெமோதரை.



அங்.இல : 2107

எம்.எம்.எம்.ஹிஜாப்,
தரம் - 11A,
சாஹிரா கல்லூரி.,
கல்முனை.



அங்.இல : 2108

வி.ரோஷினி,
தரம் - 6B,
இந்துக் கல்லூரி,
கம்பளை.



அங்.இல : 2109

தவராசா சுவிதா,
தரம் - 11C,
மீசாலை வீரசிங்கம் ம.வித்.,
மீசாலை.



அங்.இல : 2110

க.நவநீதன்,
தரம் - 8,
கணேஸ்வரா ம.வித்.,
வவுனியா.



அங்.இல : 2111

அ.நிலோஜன்,
தரம் - 12,
மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.



அங்.இல : 2112

ஏ.எம்.நில்வான்,
தரம் - 10A,
க/எலமல் பொத மு.ம.வித்.,
வஹகோட்டை.



அங்.இல : 2113

கி.தீபாஜினி,
தரம் - 13,
பூநகரி நல்லூர் ம.வித்.,
பூநகரி.



அங்.இல : 2114

ர.சதீஸ்,
தரம் - 10B,
கிளி/திருவையாறு ம.வித்.,
கிளிநொச்சி

---

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



பொத்துவில், 4 ஆம் வீட்டைச் சேர்ந்த அயாத்து முஹம்மட்-றாபியத்துல் அதவியா தம்பதிகளின் செல்வப் புதல்வி ஃபாத்திமா நுஹா, தனது இரண்டாவது பிறந்த நாளை 18.08.2008 அன்று தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்-ஏ.எம்.எம்.நிஸாம்)*



கொழும்பு-14,அவ்வல் சாவியா வீதியைச் சேர்ந்த அம்ஜாத்-சியாரா தம்பதிகளின் செல்வப் புதல்வி ஃபாத்திமா சஃப்னா, தனது பதினொராவது பிறந்த நாளை 25.08.2008 அன்று தனது இல்லத்தில் வெகு விமர்சையாக் கொண்டாடினார். இவரை உம்மா-வாப்பா மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்-எம்.எம்.எம்.அஸ்கர்)*

---

வீ... உங்களுக்கு மட்டும்!

## கலைமான்



இந்தியாவைத் தனது தாயகமாகக் கொண்ட மான் இனம்தான் இந்தக் கலைமான் (Blackbuck). இதனை திருகுமான், வெளிமான், முருகுமான், கருஞ்சிக் கிடாய் என பல்வேறு பெயர்களினால் அழைக்கின்றனர். ஒரு காலத்தில் இந்தியாவின் பரந்த சமவெளிகளில் இவை கூட்டம் கூட்டமாகக் காணப்பட்டபோதும், மனிதர்களின் மான்வேட்டை காரணமாக இவற்றின் எண்ணிக்கை தற்போது குறைவடைந்துவிட்டது.

கலைமான் இனத்தை ஐக்கிய அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்திலும் ஆர்ஜன்டீனாவின் சில பிரதேசங்களிலும் காணலாம். இந்தியாவிலுள்ள விலங்குகளில் மிகவும் வேகமாக ஓடக்கூடிய விலங்கு இந்தக் கலைமான்தானாம். இது மணிக்கு சுமார் 40-60 கிலோமீற்றர் வேகத்தில் ஓடக்கூடியது.

---




கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.ஆர்.எம்.ரினாஸ்,
தரம் - 6,
தல்துவ மு.ம.வித்.,
அவிசாவெல்ல.



ர.சோனியா,
தரம் - 9I,
மகாஜனக் கல்லூரி,
பாலமீன்மடு.



பி.எஃப்.இனூஷா,
தரம் - 11,
ப/மிராஹவத்த மு.வித்.,
பண்டாரவளை.




எம்.ஏ.எம்.ஆசிக்,
தரம் - 4,
அல்-பதுரியா மு.ம.வித்.,
கஹகொல்ல.



ஏ.பி.எம்.லிசான், தரம் - 8D,
ஸாஹிரா தே.பா.,
கல்முனை.



எம்.ஐ.ஹுமைதா,
தரம் - 6B,
கொட்டாஞ்சேனை மு.வித்.,
கொழும்பு-13.



பஸ்ரினா ஹம்ஸா,
தரம் - 4,
இக்ரா மு.ம.வித்.,
உலப்பனை.



பாத்திமா முஹுசாஸ்,
தரம் - 7,
பாத்திமா மகளிர் ம.வித்.,
புத்தளம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் பாட்டிக்கும் பேத்திக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்



ආච්චි: දුව මෙහේ එන්න.
துவ மெஹே என்ன.
பாட்டி: மகள், இங்கே வாங்க.

මිණිබිරි: ඇයි ආච්චි, මොනවාද ඕනේ ?
எய் ஆச்சி, மொனவாத ஓணே?
பேத்தி: ஏன் பாட்டி என்ன வேண்டும்?

ආච්චි: මගේ කණ්ණාඩිය දැක්කද දුව ?
மகே கண்ணாடிய தெக்கத துவ?
பாட்டி: என்னுடைய கண்ணாடியைக் கண்டாயா மகள்?

මිණිබිරි: ආච්චි කණ්ණාඩිය කොහේද තිබ්බේ ?
ஆச்சி கண்ணாடிய கொஹேத திப்பே?
பேத்தி: பாட்டி கண்ணாடியை எங்கே வைத்தீர்கள்?

ආච්චි: මගේ කාමරයේ තමා. දැන් නැහැ.
மகே காமரயே தமா. தென் நெஹே.
பாட்டி: என் அறையில்தான். இப்போது இல்லை.

මිණිබිරි: ආච්චි සාලේ ඉඳගෙන පත්තරේ බැලුව නේද ?
ஆச்சி சாலே இந்தகென பத்தரே பெளுவா நேத?
பேத்தி: பாட்டி வரவேற்பறையில் இருந்து பத்திரிகை பார்த்தீங்கதானே?

ආච්චි: ඔව් දුව. මම පත්තරේ බලලා කාමරයට අරගෙන ගියා.
ஒவ் துவ. மம பத்தரே பளளா காமரயட அறகென கியா.
பாட்டி: ஆம் மகள். நான் பத்திரிகையைப் பார்த்துவிட்டு அறைக்குள் கொண்டு போனேன்.

මිණිබිරි: ඉන්න, මම කාමරයේ බලන්නම්.
இன்ன, மம காமரயே பளன்னம்.
பேத்தி: இருங்க, நான் அறையில் பார்க்கின்றேன்.

මේසය උඩ නැහැ ආච්චි. ඇඳුම් පෙට්ටියට දැම්මද ?
மேசய உட நெஹே ஆச்சி. எந்தும் பெட்டியட தெம்மத?
மேசைக்கு மேல் இல்லை பாட்டி. உடுப்புப் பெட்டிக்குள் போட்டீர்களா?

ආච්චි: නැහැ දුව.
நெஹே துவ.
பாட்டி: இல்லை மகள்.

මිණිබිරි: ආ... මේ තියෙන්නේ කෑම මේසය උඩ.
ஆ...மே தியென்னே. கேம மேசய உட.
பேத்தி: ஆ... இதோ இருக்கு. உணவு மேசைக்கு மேல்.

මෙන්න ආච්චි කණ්ණාඩිය.
மென்ன ஆச்சி கண்ணாடிய.
இந்தாங்க பாட்டி கண்ணாடி.



ආච්චි: හොඳ දුව.
ஹொந்த துவ.
பாட்டி: நல்ல மகள்.

## பயிற்சி

பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.

உதா: மகள் இங்கே வாங்க.
දුව මෙහේ එන්න.

i கண்ணாடியை எங்கே வைத்தீர்கள்?
..........................................................

ii நான் பத்திரிகையைப் பார்த்தேன்.
..........................................................

iii நான் அறையில் பார்க்கின்றேன்.
..........................................................






**Can** எனும் எதிரிடை துணை வினைச் சொல்லை (Modal Auxiliary Verb) மூலவினைச் சொல்லுடன் (Stem Verb) கையாண்டு அமைக்கப்பட்ட 'வினா' வாக்கியம் , 'உடன்பாடு' வாக்கியம் மற்றும் 'எதிர்மறை' வாக்கியம் என்பன வற்றை மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

**He, She, It** முதலான பிரதிப்பெயர்ச் சொற்களுக்குப் (Pronouns) பதிலாக பெயர்ச் சொற்களை (Nouns) எழுவாய் பகுதியில் கையாண்டு அமைக்கப்பட்ட வாக்கியங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) Can Nimal swim?
நிமாலால் நீந்த முடியுமா? (வினா வாக்கியம்)

(ஆ) Yes, Nimal can swim.
ஆம், நிமாலால் நீந்த முடியும். (உடன்பாடு வாக்கியம்)

(இ) No, Nimal can not swim.
இல்லை, நிமாலால் நீந்த முடியாது. (எதிர்மறை வாக்கியம்)

---

(அ) Can Mary draw?
மேரியால் வரைய முடியுமா? (வினா வாக்கியம்)

(ஆ) Yes, Mary can draw.
ஆம், மேரியால் வரைய முடியும். (உடன்பாடு வாக்கியம்)

(இ) No, Mary can not draw.
இல்லை, மேரியால் வரைய முடியாது. (எதிர்மறை வாக்கியம்)

---

(அ) Can this dog jump?
இந்த நாயால் பாய முடியுமா? (வினா வாக்கியம்)

(ஆ) Yes, this dog can jump.
ஆம், இந்த நாயால் பாய முடியும். (உடன்பாடு வாக்கியம்)

(இ) No, this dog can not jump.
இல்லை, இந்த நாயால் பாய முடியாது. (எதிர்மறை வாக்கியம்)

மேற்படி வாக்கியங்கள் செயற்படுபொருள் (Object) சகிதம் பின்வருமாறு அமைகின்றன.

(அ) Can Nimal swim in the sea?
நிமாலால் கடலில் நீந்த முடியுமா? (வினா)

(ஆ) Yes, Nimal can swim in the sea.
ஆம், நிமாலால் கடலில் நீந்த முடியும். (உடன்பாடு)

(இ) No, Nimal can not swim in the sea.
இல்லை, நிமாலால் கடலில் நீந்த முடியாது. (எதிர்மறை)

---

(அ) Can Mary draw a picture?
மேரியால் ஒரு படம் வரைய முடியுமா? (வினா)

(ஆ) Yes, Mary can draw a picture.
ஆம், மேரியால் ஒரு படம் வரைய முடியும். (உடன்பாடு)

(இ) No, Mary can not draw a picture.
இல்லை, மேரியால் ஒரு படம் வரைய முடியாது. (எதிர்மறை)

---

(அ) Can this dog jump over this fence?
இந்த நாயால் இந்த வேலியின் மேலால் பாய முடியுமா? (வினா)

(ஆ) Yes, this dog can jump over this fence.
ஆம், இந்த நாயால் இந்த வேலியின் மேலால் பாய முடியும். (உடன்பாடு)

(இ) No, this dog can not jump over this fence.
இல்லை, இந்த நாயால் இந்த வேலியின் மேலால் பாய முடியாது. (எதிர்மறை)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்லஸ்



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.



# முடிசூடவுள்ள வில்லியம்ஸ்

பிரிட்டனில் அடுத்த மன்னராக இளவரசர் சார்ள்ஸின் மகன் வில்லியம் முடிசூட்டப்படலாம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இளவரசர் சார்ள்ஸுக்கு அடுத்தபடியாகவே வில்லியம்ஸ் இருக்கின்ற போதிலும் இளவரசர் சார்ள்ஸ் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்ட சிக்கல்களின் காரணமாக முடிசூடக்கூடிய வாய்ப்பினை இழந்திருந்தார். எனவே, அதேநிலை அவரது மகனுக்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் இளவரசர் வில்லியம்ஸ் தரப்பார் ஆர்வமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

வில்லியம் தற்போது பொருத்தமான வயதில் உள்ளார். மன்னர் பதவியை வகிக்கக்கூடிய நிலையிலும் உள்ளார் என்ற காரணங்களைக் காட்டி அவருக்கே மன்னர் பதவி வழங்கப்படுவது பொருத்தமாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை, இளவரசர் வில்லியமை மன்னராக முடிசூட்டுவதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யப் படைகளை மீளப் பெறல்



ஜோர்ஜியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த ரஷ்ய இராணுவத்தினரை மீள அழைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தமது இராணுவத்தினை ஜோர்ஜியாவிலிருந்து விலக்கிக் கொள்கின்றபோதிலும் அமைதிப்படையொன்று தொடர்ந்தும் ஜோர்ஜியாவில் நிலை கொண்டிருக்கும் என்றும் ரஷ்யா சுட்டிக்காட்டியுள்ளது.

ஏற்கனவே, ஜோர்ஜியாவிலிருந்து பிரிந்து சென்ற தெற்கு ஒட்ரேஷியாவை மீண்டும் ஆக்கிரமிக்கும் நோக்கில் ஜோர்ஜியா செயற்பட்டமைக்கு எதிராக ரஷ்யா தலையிட்டமையினால் ஜோர்ஜியாவில் ரஷ்யப் படையினர் பாரிய தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

தெற்கு ஒட்ரேஷியா ரஷ்யாவிற்கு சார்பான நாடாக நடந்து கொண்டமையின் காரணமாகவே இதில் ரஷ்யா தனது ஈடுபாட்டைக் காட்டியது எனவும் ரஷ்யப் படையினர் உடனடியாக ஜோர்ஜியாவிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று அமெரிக்கா அழுத்தத்தைக் கொடுத்த போதிலும் பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலஸ் சர்கோனியின் தலையீட்டையடுத்தே ரஷ்யா தனது படைகளை விலக்கிக் கொள்ள சம்மதித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# நேபாளப் பிரதமரின் நட்புக்கரம்



பழைய கோபதாபங்களை மறந்து புதிய நேபாளமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைக்குமாறு நேபாளத்தின் புதிய பிரதமர் பிரசன்டா அந்நாட்டின் இராணுவத்தினருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கெரில்லா அமைப்பொன்றின் தலைவராக இருந்த பிரசன்டா பத்து வருடங்களுக்கும் மேலாக அந்நாட்டின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக இராணுவத்தை எதிர்த்துப் போராடியவராவார்.

கடந்த ஏப்ரல் மாதம் நேபாளத்தில் நடைபெற்ற தேர்தலில் பிரசன்டா தலைமை வகிக்கும் 'மாவோ' அமைப்பு வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது. இதனால், நாட்டின் காவல் துறையினரும் பிரசன்டாவின் கட்டுக்குள் வந்துள்ளனர்.

இத்தகைய பின்னணியில் மேற்படி அழைப்பினை இராணுவத்தினருக்கு பிரசன்டா விடுத்துள்ளார். இதன்படி, இராணுவம், பொலிஸ் ஆகியனவற்றிடம் தமது அழைப்பினை விடுத்துள்ள பிரசன்டா அரசாங்க தரப்பினருக்கோ, தமக்கோ காவல்துறையினருடன் எவ்விதமான கோபதாபங்களும் இல்லை என்றும் கூறியுள்ள பிரசன்டா "ஒருபுறம் உலகை வெல்வதற்கானவாய்ப்பு, மறுபுறம் மலையளவு பாரிய சவால்களுக்கும் முகம்கொடுக்க வேண்டியிருப்பதாக" அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அற்லஸ் கேள்வி - 167

**கேள்வி:** 'பிரசன்டா' எந்த நாட்டின் பிரதமராக பதவி வகிக்கின்றார்?

சரியான விடை..........................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 167,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 165 இன் சரியான விடை: 92,000 எண்ணெய் பெரல்கள்**

பரிசு பெறுவோர்

ஷியானா இஷாக்,
61B, சாஹிரா கல்லூரி வீதி, ஹிங்குலோய,மாவனல்லை.

தனுஷ்யந்தன்,
21A, பெரிய உப்போடை வீதி, மட்டக்களப்பு.

எம்.மஸூத்,
380/5, வலயக் கல்விக் காரியாலயம் அருகாமை,
ஹாலி-எல.

# கடத்தப்பட்டவர் இருக்கும் இடத்தை காட்டும் புதுவகைக் கருவி

**கப்பம் பெறும் நோக்கில் மெக்ஸிக்கோவைச் சேர்ந்த தனவந்தர்களை கடத்திச் செல்லும் சம்பவங்கள் அந்நாட்டில் அதிகரித்துள்ளமையினால், இவ்வாறான கடத்தல்களிலிருந்து தம்மை காத்துக் கொள்வதற்காக மெக்ஸிக்கோவைச் சேர்ந்த தனவந்தர்கள் தமது உடம்பில் சிறிய ரக 'டிரான்ஸ் மீட்டர்' கருவியொன்றை பொருத்தும் வழிமுறையொன்றை கையாளத் தொடங்கியுள்ளனர்.**

**இதன்படி குறித்த நபர் ஒருவர் கடத்தப்பட்டால் அவரது உடம்பில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் டிரான்ஸ்மீட்டரின் இயக்கத்தினால் செயற்கைக்கோள் வசதிகளின் மூலம் அந்த நபர் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்தை கண்டறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். இவ்வாறான நவீன முறை கையாளப்படத் தொடங்கியிருப்பதானது கடத்தல்காரர்களுக்கு பெரும் இக்கட்டை ஏற்படுத்தியிருப்பதாகவும் கருதப்படுகின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலைவனப் புழுதிப்புயல்





பாலைவனங்களில் ஏற்படும் மணல் மற்றும் புழுதிப் புயல் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். வறண்ட காலநிலையைக் கொண்ட பாலைவனங்களில் நிலையானதோர் காலநிலையே நிலவுகின்றது. எனினும், இத்தகைய பிரதேசங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் நிலை தற்போது அதிகரித்து வருகின்றமையால் அங்கு புழுதி மற்றும் மணல் புயல் அடிக்கடி ஏற்படுவதை பரவலாகக் காணலாம். நீண்ட காலம் தொட்டே பாலைவனங்களை அண்டிய பிரதேசங்களில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தி வந்த இந்த இயற்கை அனர்த்த நிலை தற்போது மனிதனின் முறைகேடான செயற்பாடுகளால் அதிகரித்துள்ளது.

## மணற்புயலின் தோற்றம்

பல்வேறு கனியங்களின் கூட்டுச் சேர்க்கையை கொண்ட துணுக்குகளால் ஆனதுதான் மண். பாலைவனத்தில் தடைகளின்றி மிக வேகமாக வீசும் காற்றினால் மண் துணுக்குகள் உடைந்து தனித்தனியாகப் பிரிந்துவிடும். இவ்வாறு பிரிந்த பெருந்தொகையான துணுக்குகளே புழுதிப்புயல் ஏற்படக் காரணமாய் அமைகின்றன. நிறையில் குறைந்த சின்னஞ்சிறிய துணுக்குகள் காற்றின் மூலம் மேலே எடுத்துச் செல்லப்படும். இவ்வாறு மேலெடுத்துச் செல்லப்படுவதனால் வளிமண்டலத்தில் சேரும் தூசு துணிக்கைகளின் அளவானது 0.1 மில்லிமீற்றருக்கும் 0.002 ற்கு இடைப்பட்ட விட்டத்தையும் கொண்டதாகக் காணப்படும்.

## புழுதி அல்லது மணற்புயலின் தாக்கம்

பாலைவனங்களிலும் அதன் எல்லைகளிலும் ஏற்படும் இந்த மணல் மற்றும் புழுதிப்புயலில் அதிகமானவை பாலைவனத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவது இல்லை. மாறாக, பாலைவனங்களை அண்டியுள்ள, பாலைவனங்களே இல்லாத ஏனைய நாடுகளிலேயே பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது என்பது முக்கிய அம்சமாகும்.

அதன்படி, மேற்கு சீனாவிலும் அதனை அண்டிய பகுதிகளிலுமே உலகிலேயே அதிக அளவு மணற்புயல் வீசுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. 1993 இல் மேற்குச் சீனாவில் ஏற்பட்ட பெருந்தூசுப் புயல் பெருமளவிலான சேதங்களை ஏற்படுத்தியதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. பூமியதிர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட இந்த மணல் மற்றும் புழுதி மண்டலம் ஆனது காற்றின் மூலம் புயலாக மாறி, மனித உயிர்களைப் பறித்ததோடு, பல்வேறு பொருளாதார சேதங்களையும் ஏற்படுத்தியதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு மேலெழுந்த புழுதிப்புயல் செந்நிறப் புகை மண்டலம் போல் காட்சி அளித்தது. இப்புகை மண்டலத்தின் அளவு ஏறக்குறைய 1 மில்லியன் சதுர கிலோமீற்றர் வரை பரந்திருந்ததாகவும் அதில் ஒன்றரை மில்லியன் தொன் தூசுகள் படிந்திருந்ததாகவும் விஞ்ஞானிகளால் கணிப்பிடப்பட்டுள்ளது.

1992 இல் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான ஆய்வின்படி, 'சஹாரா' பாலைவனத்தில் ஆரம்பித்த புழுதிப் புயல், அட்லாண்டிக் சமுத்திரத்தையும் கடந்து தென் அமெரிக்காவிலுள்ள பிரேசில் நாட்டில் 'அமேசன்' சமவெளி வரை பரவியுள்ளதாகவும் இப்புயல் மூலம் ஏறக்குறைய ஐந்து லட்சம் தொன் அளவு தூசு 'அமேசன்' சமவெளியில் படிந்துள்ளதாக மேலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'சஹாரா' பாலைவனத்தில் ஏற்படும் இந்த புழுதிப் புயலானது மத்திய தரைக்கடலைக் கடந்து, ஐரோப்பாவின் ஸ்பெய்ன், ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய மத்திய ஐரோப்பிய நாடுகளில் படிந்திருப்பதாகவும், அது இந்நாடுகளின் காலநிலையில் பாரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பிரான்ஸ் நாட்டின் வளம்மிக்க செம்மண்ணானது சஹாராவில் இருந்து வீசிய மணல் மற்றும் புழுதிப் புயலால் உந்தப்பட்டு வந்து படிந்ததாக புவியியல் அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

சீனா மற்றும் 'சஹாரா' பிரதேசங்களைத் தவிர அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் இந்த புழுதிப்புயலானது பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. அவுஸ்திரேலிய பாலைவனத்தில் புழுதிப் புயல் ஏற்படுவதானது இன்று ஒரு சர்வ சாதாரண நிகழ்வாக மாறியுள்ளது.

## பாதிப்புகள்

புழுதிப் புயலானது மக்களின் ஆரோக்கிய வாழ்விற்கு பெரும் தீங்கு விளைவிப்பதாக தீர்க்கமான ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. தூசிப் புயல் அதிகமாக ஏற்படும் பிரதேசங்களிலும் அதன் அருகிலும் வாழும் மக்களின் நுரையீரலினுள் தூசித்துணிக்கைகள் சென்று தங்கிவிடுகின்றன. புழுதிப் புயலில் 'சிலிக்கா' அல்லது 'திருவானா' கனியங்களின் சேர்க்கை அதிகம் இருப்பதால் அந்த 'சிலிக்கா' துணிக்கைகளை உட்சுவாசிக்கும்பொழுது அவை நுரையீரலின் உள்படிந்து 'சிலிகோசிஸ்' எனும் நோயை ஏற்படுத்துகின்றன. 'சிலிக்கா' துணிக்கைகள் மிகவும் கடுமையானதும் வெட்டும் தன்மையும் கொண்டன. அவை நுரையீரலின் மென்மையான பகுதிகளை வெட்டி அல்லது கீறிக் காயத்தை ஏற்படுத்தக் கூடியன. அத்துடன், ஆஸ்துமா நோய் ஏற்படவும் வழி வகுக்கின்றது.

மேலும், அவற்றில் அலுமினியம், லெட் ஆகிய உலோகங்கள் அதிகம் கலந்திருப்பதாகவும் இந்த உலோகத் துணிக்கைகள் நுரையீரலினுள் நுழைவதனால் பல்வேறு புற்றுநோய் அறிகுறிகளை ஏற்படுத்தக் காரணியாக அமைகின்றன. மேலும், விவசாயப் பிரதேசங்கள் மற்றும் குடிநீர் பெறும் பிரதேசங்களில் தூசி துணிக்கைகள் படிவதனால் மனிதனின் சரீரத்தினுள் அவை உட்செல்லும் வாய்ப்பு அதிகமாகின்றது. இதனால், மேலும் பல நோய்கள் உருவாகலாம்.







சஹாராவில் இருந்து மேலெழும்பும் புழுதிப்புயல்

## பாலைவனமாதல்

புழுதி மற்றும் மணற்புயல் ஏற்படுவதனால் புவி மீது விழும் சூரியக் கதிர்களின் அளவு குறைக்கப்படுகின்றது என்றும் ஒரு வருடத்திற்குள் பல புழுதிப் புயல்கள் ஏற்படுமாயின் எதிர்காலத்தில் குளிர்ச்சியான காலநிலை ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு என்றும் விஞ்ஞானிகள் எதிர்வு கூறுகின்றனர். அத்துடன் புழுதிப் புயல் அதிகரிப்பதன் மூலம் பாலைவனங்கள் அதிகரிப்பதோடு, பாலைவனங்களின் பரப்பும் அதிகரிக்கும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். பாலைவனங்களின் எல்லையில் உள்ள வறண்ட காலநிலை வலயத்தில் அதிகமாக மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகளே இதற்கு முக்கிய காரணம் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். நிலத்தை விவசாயத்திற்காக உழுது, இலகுவாக்கி, இரண்டு அல்லது மூன்று போகங்கள் விவசாயம் மேற்கொண்ட பின், மண் பயனற்றுப் போனதும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் இப்பிரதேசத்தைக் கைவிட்டுச் செல்கின்றனர். இந்நிலை மணல்-புழுதிப்புயல் ஏற்படப் பிரதான காரணமாக அமைந்து விடுகின்றது எனவும் கூறப்படுகின்றது.

-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு பத்து மணியானபோது போய் 'பஞ்சிங்' செய்துவிட்டு வந்தான் விமல். 'பஞ்சிங் குளொக்' இருக்குமிடத்துக்குப் போகும் வழி சற்றுப் பயங்கரமாகத்தான் இருந்தது. போதியளவு மின் விளக்குகளும் போடப்பட்டிருக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக 'முணுக் முணுக்' கென அவை எரிந்து கொண்டிருந்தன. டோர்ச்




லைட்டின் உதவியோடுதான் அவன் அங்கு போகவேண்டி இருந்தது.

பயங்கரமான சூழல் இருந்தாலும் திரையரங்குக்குள் ஆட்கள் இருந்து படம் பார்த்துக் கொண்டு சிரிப்பும் பேச்சும் கலகலப்புமாக இருந்ததால் அவனுக்கு அப்பொழுது அவ்வளவாக அச்சம் இருக்கவில்லை.

ஆனால், படம் முடிந்து எல்லோரும் போன பின்னர் திரையரங்கு வெறிச்சோடி விடுமே. அதை நினைக்கையில்தான் அவனுக்கு மிகுந்த பயமாக இருந்தது. சிந்தித்தபடியே திரையரங்குக்கு வந்து சேர்ந்தான். அன்றைய தினம் படம் புதிதாக திரையிடப்பட்டிருந்தும் அவனுக்கு அதைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. படம் ஓட்டுபவரும் வீண் வம்பு பேசுபவராக இருந்ததால் அவன் கெபினுக்கும் போக விரும்பவில்லை.

முன் வாயிலின் அருகில் போய் நின்றவன் அங்கு கதவுக்கு அருகில் 'டிக்கட்' கிழிக்கும் வேலை செய்து கொண்டு இருந்தவரைக் கண்டதும் வியப்புக்குள்ளானான். காரணம் அங்கு அந்த வேலையை செய்து கொண்டு இருந்தவர் முதல்நாள் அலுவலகத்தில் மெனேஜராகக் கடமையாற்றிவர்தான். வேலைக்கு ஆள் இல்லாததால் இன்று இவர் அந்த வேலையை செய்கிறார்

**பாழடைந்த நிலையில் இருக்கும் அந்த வீட்டுப் பக்கத்திலிருந்து ஏதோ சத்தம் வருவது போலிருந்ததைக் கேட்டுப் பீதியடைந்தவன்; தன்னையுமறியாமல் இலேசாக டோர்ச் வெளிச்சத்தை அந்தப் பக்கம் பாய்ச்சிவிட்டான்.**

போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டான் விமல்.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனால் ஏதும் சொல்வாரோ என்று நினைத்தபடி கதவருகில் போய் நின்றான். அவர் அதனைப் புரிந்து கொண்டு இருக்கவேண்டும். அவர் கேட்டார், ''என்ன தம்பி படம் பார்க்க வேண்டுமா?'' அவன் மௌனமாகத் தலையை ஆட்டினான்.

''ம்... பார்க்க ஆசையாக இருந்தால் பார்க்க வேண்டியதுதானே. இதற்குப் போய் பயப்பட வேண்டுமா? தியேட்டரில் வேலை செய்து கொண்டு படம் கூடப் பார்க்காவிட்டால் என்ன பிரயோசனம்?''

''இல்லை.. வந்து நான் 'பஞ்சிங்' செய்யப் போக வேண்டும்''

''அதனால், என்ன? கதவை இலேசாகத் திறந்து வைக்கிறேன். வாசலில் நின்று கொண்டே பாருங்கள். இப்பொழுது இரவுக் காட்சிதானே. கதவைத் திறந்து வைத்தால் பரவாயில்லை'' என்று கூறிக்கொண்டே அவர் கதவை இலசாகத் திறந்து வைத்தார்.

அவர் மெனேஜர் என்பதால் அவருடன் மரியாதையாகவே பேசவேண்டும் என்ற நினைப்பில் அவன் ''நன்றி சேர்'' என்று கூறியபடி கதவருகில் போய் நின்று கொண்டான். அவர் அவனை விசித்திரமாகப் பார்த்தார். பின்னர், ''தம்பி என்னை சேர் என்றெல்லாம் அழைக்க வேண்டாம். மாதவனை அழைப்பது போல் என்னையும் அண்ணன் என்றே கூப்பிடு'' என்றார்.

அவரைச் சிறிது காக்காய் பிடித்து வைத்துக் கொள்ளவேண்டும் என்னும் நினைப்பில் அவன், ''இல்லை சேர் கௌரவமான உத்தியோகம் செய்யும் உங்களை அப்படி அழைப்பது மரியாதை இல்லையே!'' என்று கூறினான்.

''கௌரவமான உத்தியோகமா? வாசலில் நின்று 'டிக்கட்' கிழித்துக் கொண்டு இருக்கிறேன். இதுதான் கௌரவமான உத்தியோகமா?'' என்று சிரித்தபடி கேட்டார் அவர்.

''தியேட்டர் மெனேஜர் நீங்கள்தானே அண்ணன்?'' என்று கேட்டான் விமல்.

''ம்.... அப்படித்தான் நினைத்துக் கொண்டு வேலையில் சேர்ந்தேன். ஆனால், இப்போது 'பியோன்' வேலையும் செய்கிறேன். முதலாளி வீட்டுக்கு மரக்கறி வாங்கவும் செல்கிறேன்'' என்று விரக்தியுடன் கூறினார்.

எல்லோரும் இங்கு ஒருவித வெறுப்புடன்தான் வேலை செய்கிறார்கள் என்று புரிந்துகொண்டான் விமல். பின்னர் அவன் கேட்டான், ''ஏன் அண்ணன் எங்காவது நகரப் பகுதிக்குப் போய் தியேட்டர் ஒன்றில் சேர்ந்தால் நல்ல வருவாயில் கௌரவமாக வேலை செய்யலாமே?''

**இரவு மூன்று மணியளவில் பேய், பிசாசுகள் உலாவும் என்று யாரோ எப்போதோ கூறியது நினைவுக்கு வந்ததால் விமல் அந்த நேரத்தை நினைத்து மிகவும் பயந்து கொண்டிருந்தான்.**

''செய்யலாம்தான். ஆனால், இங்கு ஊரோடு இருப்பதால் வீணான செலவுகள் இல்லை. குடும்பத்தை இங்கு வைத்துக் கொண்டு வேறு எங்காவது போய் வேலை செய்தால் இன்று இருக்கும் வாழ்க்கைச் செலவை சமாளிப்பது கஷ்டம் அல்லவா?'' என்று கூறினார்.

கெபினில் வெட்டிப்பேச்சு பேசிக்கொண்டு தன்னைப் பயமுறுத்திக் கொண்டு இருந்தவரை விட இவர் எவ்வளவோ பரவாயில்லை என்று நினைத்துக் கொண்ட விமல் அவருடன் பேசிக்



கொண்டே படத்தையும் பார்த்துக் கொண்டு இருந்தான். ஆனால், அவர் அடுத்ததாகக் கேட்ட கேள்வி அவனுக்கு அவர் மீதும் எரிச்சல் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. மீண்டும் அவர், ''ஏன் தம்பி, இந்தப் பயங்கரமான தியேட்டரில் நீங்கள் மட்டும் தனியாகவா இரவு காவல் வேலை செய்றீங்க?''

''அது வந்து அண்ணன்... காவல்காரர் வரும்வரை மட்டும் தானே'' என்று கூறியவன் 'பின்னர்' நேரத்தைப் பார்த்து விட்டு, ''அண்ணன் நான் 'பஞ்சிங்' செய்யப் போகவேண்டும்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

''ச்சே! யாரைப் பார்த்தாலும் என்னைப் பயமுறுத்துவதிலேயே இருக்கிறார்களே. இவர்களுக்கு மனச்சாட்சியே இல்லையா? தனியாக இருந்து காவல் வேலை செய்கிறேன். எனக்குத் தைரியம் சொல்வதை விட்டு விட்டு பயமுறுத்துகிறார்களே'' என்று மனதுக்குள் சலித்துக் கொண்டான்.

இப்படி பலவாறு சிந்தித்துக் கொண்டே 'பஞ்சிங்' செய்யச் சென்றான். அடுத்து பன்னிரெண்டு மணிக்கு 'பஞ்சிங்' செய்யச் செல்லவேண்டும். அப்போது படம் முடிந்து எல்லோரும் போய் விடுவார்கள். பன்னிரெண்டு மணியிலிருந்து அதிகாலை ஐந்து மணி வரை பஞ்சிங் செய்வதுதான், மிகக் கஷ்டமான வேலை என்று நினைத்துக் கொண்டான். பன்னிரெண்டு மணியும் நெருங்கிக் கொண்டிருந்தது. படம் இன்னும் முடியவில்லை. படம் முடியாமல் இருந்தால் பன்னிரெண்டு மணிக்கும் போய் ஒருவாறு பஞ்சிங் செய்துவிட்டு வந்து விடலாம் என்று கடவுளை கும்பிட்டுக் கொண்டு இருந்தான். அவன் எதிர்பார்த்தபடியே பன்னிரெண்டு மணியாகியும் படம் முடியவில்லை. அவனுக்கு ஓரளவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. வேகமாகப் போய் பஞ்சிங் அடித்துவிட்டு வந்தான். அவன் வந்து சில நிமிடங்களில் படம் முடிந்து ஆட்கள் எல்லாம் வெளியில் சென்று கொண்டிருந்தனர். சில நிமிடங்களில் எல்லோருமே போய்விட்டார்கள். திரையரங்கு வெறிச்சேடிய நிலைக்கு வந்தது. மீண்டும் ஒரு மணிக்கும் இரண்டு மணிக்கும் போய் பயந்து பயந்து ஒருவாறு பஞ்சிங் அடித்துவிட்டு வந்தான்.

மூன்று மணிக்குப் போக வேண்டியதை நினைக்கையில்தான் அவனுக்கு மிக மிக பயமாக இருந்தது. ஏனென்றால், அந்த நேரத்தில் தான் பேய், பிசாசுகள் உலவும் என்று யாரோ எப்போதோ கூறியது அவனுக்கு அந்த நேரத்தில் நினைவு வந்தது. உடல் நடுங்கிக் கொண்டு இருந்தது. இருந்தாலும் ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சென்றான். நடுங்கியபடியே போய் பஞ்சிங் அடித்தான். சரி... இனி வேகமாகப் போய்விட வேண்டும் என்று திரும்பிப் போக நினைக்கையில்....

மதில் சுவரை அடுத்து உள்ள மாமரத்துக்கு அருகில் பாழடைந்த நிலையில் இருக்கும் அந்த வீட்டுப் பக்கத்திலிருந்து ஏதோ சத்தம் வருவது போலிருந்ததைக் கேட்டுப் பீதியடைந்தவன்; தன்னையுமறியாமல் இலேசாக டோர்ச் வெளிச்சத்தை அந்தப் பக்கம் பாய்ச்சிவிட்டான்.

அவ்வளவுதான்...

அவனை நோக்கி ஏதோ பறந்து வருவது போல் தெரிந்தது. அது வந்து அவன் மீது மோதிக் கீழே விழுந்தது. அது என்னவாக இருக்கும் யார் அதை தன்மீது வீசியிருப்பார்கள். யோசிக்கு முன்னரே அங்கிருந்து..., ''ஹெஹ்ஹெஹ்ஹெஹ்ஹே....!'' என்று வித்தியாசமான சிரிப்பொலி கேட்டது.

அந்தச் சத்தம் மனிதர் சிரிப்பது போல் தெரியவில்லை. அப்படியானால் அது என்ன சத்தமாக இருக்கும்? என்று யோசித்தான். அவனால் அங்கு நிற்கவும் முடியவில்லை. திரும்பிப் போகவும் முடியவில்லை.

என்ன செய்வதென்று புரியாத நிலையில் மனதை திடப்படுத்திக் கொண்டு டோர்ச் வெளிச்சத்தை சிரிப்புச் சத்தம் வந்த பக்கம் பாய்ச்சினான். அங்கே....

அவன் கண்ட காட்சி...?

பயங்கரக் கரிய உருவம் ஒன்று பற்களை நறநறவெனக் கடித்தபடி அவனைப் பார்த்து முறைத்துக் கொண்டு இருந்தது.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜமாய்த்த ஜெமெய்க்கா!

பீஜிங் ஒலிம்பிக் போட்டிகள் இனிதே நிறைவு பெற்றுள்ளன. விளையாட்டு ரீதியில் அமெரிக்காவிற்கு பதிலடி கொடுக்க காத்திருந்த சீனா இம்முறை தனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டுள்ளது. மறுபுறம் ஒட்டப் போட்டிகளில் ஜெமெய்க்கா வீரர்கள் அமெரிக்காவிற்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்



துள்ளனர். அதன்படி, உலகில் மிக வேகமான வீர, வீராங்கனைகளைக் கொண்ட நாடு என்ற பெருமையை ஜெமெய்க்கா பெற்றுள்ளது. இந்த நாட்டைச் சேர்ந்த உசேன் போல்ட்-ஆண்கள் பிரிவிலும், ஷேர்லி ஆன்-மகளிர் பிரிவிலும் ஓட்ட சாதனையாளர்களாக மிளிர்ந்துள்ளமை உலக நாடுகளின் பார்வையை ஜெமெய்க்கா நோக்கித் திருப்பியுள்ளது.

ஆண்கள் பிரிவிற்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் உசேன் போல்ட் புதிய உலக சாதனையை ஏற்படுத்தியமை பெரியதோர் திருப்புமுனையாக அமைந்துள்ளது. 09.69 செக்கன் கணக்கில் 100 மீற்றரை ஓடி முடித்தே இந்த சாதனையை அவர் நிகழ்த்தினார்.

மேலும், பலரது எதிர்பார்ப்பிற்கு ஆளாகியிருந்த அமெரிக்காவைச் சேர்ந்த டைசன் கிரே என்ற வீரர் வெற்றிப் பதக்கமொன்றைப் பெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அரையிறுதிப் போட்டியில் ஐந்தாவது இடத்திற்கு வந்து பெரும் ஏமாற்றத்தை அவர் அமெரிக்கர்களுக்கு ஏற்படுத்தினார். இதன் இறுதிப் போட்டியில்தான் உசேன் போல்ட் சாதனை படைத்து தங்கத்தை வெற்றியீட்டினார்.

இதில் பலரதும் கவனத்தை ஈர்த்த அம்சமாக இருந்தது என்னவென்றால், உசேன் போல்ட், இத்தனை வேகத்தில் ஓடிய போதிலும் எவ்வித களைப்பையும் அவர் வெளிக்காட்டவில்லை; அதுமட்டுமன்றி வெற்றிக்கோட்டினை அடைவதற்கு சில மீற்றர் தூரங்கள் இருக்கையில் கோட்டை தொடுவதற்கு முன்னரே சாவகாசமாக ஓடி வெற்றி இலக்கைத் தொட்ட அவரது அந்த தனிப்பாணி அனைவரையும் ஆச்சரியப் படுத்திவிட்டது.




மறுபுறம் மகளிருக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் ஜெமெய்க்க வீராங்கனையே தங்கத்தை சுவீகரித்தமையும் ஜெமெய்க்காவிற்கு மற்றுமோர் பெருமையினை ஈட்டிக் கொடுத்தது. ஷேர்லி ஆன் பிரேஸர் என்ற இந்த வீராங்கனை 100 மீற்றர் இறுதிப் போட்டியில் 10.78 செக்கன் கணக்கில் ஓடியே இச்சாதனையை நிகழ்த்தினார். இதிலும் மற்றுமோர் சிறப்பம்சமாக அமைந்த விடயம் 100 மீற்றர் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் ஜெமெய்க்கா வீராங்கனைகளே பெற்றமையாகும்.

21 வயதாகின்ற ஷேர்லி இதற்கு முன்னர் எந்தவொரு சர்வதேச போட்டியிலும் கலந்து கொண்டிராத நிலையில் அவர் கலந்து கொண்ட முதலாவது ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கத்தை வென்றமை குறிப்பிடக்கூடிய நிகழ்வாகும்.

மகளிருக்கான 100 மீற்றர் போட்டியில் அமெரிக்காவின் டோரி எட்வர்ட்ஸ் மற்றும் முனா லீ ஆகியோர் பதக்கங்களை வெற்றியீட்டக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அவர்கள் இரண்டு பேரும் முறையே எட்டாவது, ஐந்தாவது இடங்களையே பெற்றனர். ஆக, மகளிர் பிரிவிலும் கூட அமெரிக்காவிற்கு ஏமாற்றமே மிஞ்சியது.

அதன்படி, பார்க்கையில் நீச்சல் போட்டியில் அமெரிக்காவின் ஆதிக்கம் இருந்த போதிலும் ஓட்டப்போட்டியில் ஜெமெய்க்கா வீரர்கள் அமெரிக்காவிற்கு பதிலடி கொடுத்துள்ளனர் என்றே கருதப்படுகின்றது.

பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளில் கூடிய தங்கப் பதக்கங்களைப் பெற்று சீனா பெற்றுள்ள எழுச்சி ஒருபுறம், மறுபுறம் ஓட்டப்போட்டியில் ஜெமெய்க்காவின் எழுச்சி இவையிரண்டும் அசைக்க முடியாது என்ற எண்ணத்தில் இருந்த அமெரிக்காவிற்கு கிடைத்த பாரிய அடி [illegible]

## "ஓய்வு பெறும் உத்தேசம் கிடையாது"

-சுசந்திகா




பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை சார்பாக எந்தவொரு பதக்கத்தையும் வெல்ல முடியாமல் போன குறுந்தூர ஓட்ட வீராங்கனையான சுசந்திகா ஜயசிங்ஹ, போட்டிக் களத்திலிருந்து ஓய்வு பெறும் திட்டம் இது வரை தன்னிடம் கிடையாது என்று தெரிவித்துள்ளார்.

"இம்முறை ஒலிம்பிக் போட்டிகளுக்கான எனது பங்களிப்பை செலுத்தி விட்ட போதிலும் இன்னும் சில வருடங்களுக்கேனும் தொடர்ந்தும் போட்டிகளில் ஈடுபடும் உத்தேசம் இருக்கின்றது" என்று சுசந்திகா குறிப்பிட்டுள்ளார்.

அநேகமாக அடுத்த வருடம் நடைபெறவுள்ள சர்வதேச மெய்வல்லுனர் போட்டிகளே தான் கலந்து கொள்கின்ற கடைசி சர்வதேச மட்டத்திலான போட்டியாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி, சர்வதேச மெய்வல்லுனர் போட்டிகள் அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை ஜேர்மனி பேர்லின் நகரில் நடைபெறவுள்ளன.

இதேவேளை, அடுத்த வருடம் சுசந்திகா ஜயசிங்ஹ கலந்து கொள்ளக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற சர்வதேச போட்டிகள் இரண்டு உள்ளன. இதில் ஒன்று அடுத்த ஜூலை மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஆசிய மெய்வல்லுனர் போட்டிகளாகும்.

இரண்டாவது, இந்த வருடக் கடைசியில் நடைபெறவுள்ள தெற்காசிய விளையாட்டு போட்டிகளாகும்.

தனது கால் தசையில் பிடிப்பு ஏற்பட்டிருந்ததாகவும் அதனாலேயே தன்னால் ஒலிம்பிக்கில் 200 மீற்றர் தூர போட்டியில் வெற்றி மீட்ட முடியவில்லை என்று சுசந்திகா தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக் போட்டியின் போது 100 மீற்றர் ஓட்டப் போட்டியிலிருந்து விலகிய போதிலும் 100 மீற்றர் போட்டிகளிலிருந்து முழுமையாக விலகும் உத்தேசம் இல்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீசாந்த் இரண்டாம் நிலை அணியில்

இந்திய கிரிக்கெட் தேசிய அணியில் இடம்பெற்று அண்மைக்காலமாக பல போட்டிகளில் கலந்து கொண்டிருந்த வேகப்பந்து வீச்சாளரான ஸ்ரீசாந்த் இந்திய இரண்டாம் நிலை அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.



ஆசிய கிண்ணப் போட்டிகளின் பின்னர் இந்திய தேசிய அணியில் ஸ்ரீசாந்த் இடம்பெறாத நிலையில் அவர் தற்போது இரண்டாம் நிலை அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். மேற்படி இந்திய இரண்டாம் நிலை அணி அவுஸ்திரேலியா சென்று அங்கு அவுஸ்திரேலிய இரண்டாம் நிலை அணியுடன் போட்டிகளில் ஈடுபட ஏற்பாடாகியுள்ளது.

ஆசிய கிண்ணப் போட்டிகளில் இந்திய தேசிய அணியில் இடம்பெற்றிருந்த சவுலா மற்றும் உத்தப்பா ஆகியோரும் இந்த இரண்டாம் நிலை அணியில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2020 ஒலிம்பிக்கில் 'கிரிக்கெட்' இடம்பெறும்


ஒலிம்பிக் போட்டிகளில் கிரிக்கெட் போட்டிகளும் இடம்பெறும் நாள் நெருங்கி வருகின்றது. இதன்படி,




2020 ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் கிரிக்கெட் போட்டிகளையும் நடத்துவதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை இணக்கம் தெரிவித்துள்ளது. எனவே, 'டுவெண்டி டுவெண்டி' போட்டிகளாக மேற்படி போட்டிகள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தரத்திற்கு வராத நாடுகளும் கூட மேற்படி ஒலிம்பிக் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்படவும் உள்ளது. அவுஸ்திரேலியாவின் முன்னாள் வீரரான விக்கெட் காப்பாளர் எடம் கில்கிறிஸ்ட்தான் இந்த விடயத்தில் கடும் முயற்சிகளை மேற்கொண்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதனுடன், இந்தியாவின் கங்குலி, நியூஸிலாந்தின் ஸ்டீவன் ஃபிளேமிங் ஆகியோரும் இதற்கு ஆதரவாகக் குரல் கொடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'பசி' எப்படி ஏற்படுகின்றது?

**பசி உணரப்பட்டவுடன் ஏதேனும் உணவினை உட்கொள்ள நாம் பழகியுள்ளோம். உடனே பசி அடங்கிவிடும். இத்தகைய பசியானது எப்படி ஏற்படுகின்றது என்பது குறித்து நாம் தெரிந்து கொள்வோம்**


## அடிக்கடி உணரப்படும் பசி

எமது வயிற்றினுள் சிறிய பொதி ஒன்று இருக்கின்றது. அதுதான் இரைப்பை. உணவினால் நிரம்பும்போது இரைப்பை விரிவடைகின்றது. அதன் பின்னர் அது அங்கும் இங்கும் அசையும். அதன் போது, சிறிது சிறிதாக உணவு குடலுக்குள் தள்ளப்படும். நாம் உணவு உட்கொண்டு 6 மணித்தியாலங்களாகும் போது இரைப்பையினுள் வெற்றிடம் ஏற்பட்டுவிடும். எனினும், அது அவ்வப்போது அங்கும் இங்கும் அசைந்து கொண்டுதான் இருக்கும். அப்பொழுதுதான் லேசான வலியுணர்வு ஏற்படுகின்றது. அதுவே எம்மால் உணரப்படும் பசி ஆகும்.

## வயிற்றுக்குள் செல்லும் உணவுக்கு என்ன நேர்கின்றது?

இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் 75 வயதுடைய விஞ்ஞானியொருவர் பிரான்ஸில் வாழ்ந்து வந்தார். அவரது பெயர் 'ரொனி த ஈமர்'. இந்த விஞ்ஞானிக்கு வயிற்றுக்குள் செல்லும் உணவுக்கு என்ன நேர்கின்றது என்பது தொடர்பில் பலத்த சந்தேகம் ஏற்பட்டது.

கற்றவர்களிடம் இது பற்றிக் கேட்டபொழுது அவர்களால் சரியான விளக்கம் தரமுடியவில்லை. ஈமர் செல்லப்பிராணியாக கழுகு ஒன்றை வளர்த்து வந்தார். ஒருமுறை அவர் வியக்கத்தக்க காரியம் ஒன்றினைச் செய்தார். 'ஸ்பொன்ஜ்' துண்டு ஒன்றினை எடுத்து ஈயக் கடதாசியில் சுற்றி, அந்த ஈயக் கடதாசியில் சிறு துளைகளை இட்டு கழுகுக்கு உட்கொள்ளக் கொடுத்தார். சில மணிநேரங்களின் பின் கழுகு தான் உட்கொண்டதை வாந்தி எடுத்தது. கழுகு உட்கொண்ட 'ஸ்பொன்ஜ்' துண்டு பல மடங்கு பெருத்து வாந்தியின்போது வெளிவந்திருந்தது. அந்த 'ஸ்பொன்ஜ்' துண்டினைப் பிழிந்த போது நீர்த் தன்மை கொண்ட திரவம் வெளியேறியது. அது புளிப்புச் சுவையுடையதாய் இருந்தது. அப்பொழுது வயிற்றுக்குள் அமிலம் இருப்பதாக ஈமர் அறிந்து கொண்டார். அவர் மீண்டும் கழுகுக்கு ஸ்பொன்ஜ்களை உட்கொள்ளக் கொடுத்தார். அப்பொழுதும் வெளியேற்றப்பட்ட திரவத்தினை அவர் மீண்டும் பரிசோதித்தார். இதேநிலை கழுகுக்கு இறைச்சித் துண்டுகளை உட்கொள்ளக் கொடுக்கும்போது ஏற்படுவதில்லை. மாறாக, அந்த இறைச்சித் துண்டுகள் மென்மையாக்கப்பட்டு, திரவத் தன்மை கொண்டதாக மாறுவதை அவர் கண்டு கொண்டார். அதன்படி, 1750 ஆம் ஆண்டளவில் வயிற்றுக்குள் இருக்கும் திரவங்கள் உணவினைச் சமிபாடடையச் செய்வதனை ரொனி த ஈமர் கண்டறிந்தார்.



வைத்தியர் வில்லியம் போமன் மனிதர்களின் இரைப்பை குறித்து 238 பரிசோதனைகளை நடத்தினார்


## 30 வருடங்களுக்குப் பின்

நாம் மேலே கூறப்பட்ட சம்பவத்தை ஒத்த மற்றொரு சம்பவம் 30 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் இடம்பெற்றது. இத்தாலி நாட்டவரான லெசாரோ ஸ்பெலன்சானி என்பவர் நாய்களுக்கும் பூனைகளுக்கும் ஸ்பொன்ஜ்களை உண்ணக் கொடுத்தார்.


தாம் உட்கொண்டவற்றை அந்த விலங்குகள் வாந்தி எடுத்தன. அதன் ஊடாக லெசாரோ அவற்றின் வயிற்றில் உள்ள திரவங்களை சோதித்தறிந்தார். அதன் பிரதிபலன் மேற்கூறியவாறே அமைந்தது. இதனை அடுத்து மனிதர்களின் வயிற்றினுள் உணவுகள் எப்படி சமிபாடடைகின்றன? என்பது குறித்து லெசாரோ சிந்தித்தார். அப்போது அவருக்கு சிறந்த யோசனை ஒன்று தோன்றியது.

சற்று அவிக்கப்பட்ட இறைச்சித் துண்டொன்றினை 'லினன்' துணியொன்றில் சுற்றி நூலினால் கட்டினார். நூலின் முனையைப் பிடித்துக் கொண்டு இறைச்சியினை அவர் விழுங்கினார். சிறிது நேரத்தின் பின்னர் அந்த நூலைப் பிடித்து இழுத்தவுடன் கரைந்து போன இறைச்சித் துண்டு வெளியே வந்தது. ஆக, அவர் ஊகித்தது சரியாக இருந்தது.

இவ்வாறு தனது இரைப்பையினுள் உள்ள திரவத்தினை வெளியில் எடுத்து லெசாரோ ஸ்பெலன்சானி பல பரிசோதனைகளை மேற்கொண்டார். இவை அனைத்தையும் ஆராய்ந்த அவர்; ''இரைப்பையானது ஒரு இரசாயனத் தொழிற்சாலை. அதனால், சுரக்கப்படும் அமிலத்தினால் தான் உணவுகள் சமிபாடடையச் செய்யப்படுகின்றன'' எனக் கூறினார்.



லெசாரோ ஸ்பெலன்சானி தமது உடலையே பரிசோதனைக்கு உட்படுத்தினார்




## இரைப்பை பற்றிய ஆய்வு

1822 ஜூன் மாதம் 6 ஆம் திகதி, அமெரிக்காவில் மிச்சிகன் நகரில் அலெக்சிஸ் சென்ட்டி மாட்டின் எனும் நபர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். இத்துப்பாக்கிச் சூடு அவரின் வயிற்றினைத் தாக்கியது. காயமடைந்தவரை இராணுவ வைத்தியசாலைக்கு அழைத்து வந்தனர். காயத்துக்குள்ளானவரை வைத்தியர் வில்லியம் போமனிடம் கையளித்தனர். நோயாளி இறந்து விடுவார் என்றே அனைவரும் கருதினர். ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை. மருத்துவர் மேற்கொண்ட சத்திர சிகிச்சையினால் நோயாளி குணமடைந்தார்.

எனினும், துப்பாக்கிச் சூட்டு அடையாளம் அப்படியே இருந்தது. அந்த இடத்தில் ஒரு துவாரம் ஏற்பட்டிருந்தது. அந்தத் துவாரம் இரைப்பை வரை இருந்தது. இதன் ஒரு பகுதியில் தசை தென்பட்டது. தசையை விலக்கி விட்டுப் பார்த்தால் இரைப்பை தென்படும். போமன் இந்தத் துவாரத்திற்குள் பல வகையான உணவுகளை அனுப்பினார். பின்னர் அவற்றை மெதுவாக வெளியே எடுத்துப் பரிசோதித்துப் பார்த்தார். இவ்வாறு போமன் மனிதர்களின் இரைப்பை பற்றி 238 பரிசோதனைகளை நடத்தினார். இவ்வாறுதான் முற்காலத்தில் 'உணவுகள் சமிபாடடையும் முறை' குறித்து ஆராயப்பட்டது.




1750 களில் வயிற்றில் சுரக்கும் திரவங்களினால் உணவு சமிபாடடைவது கண்டுபிடிக்கப்பட்டது

## எமக்கு உணவு தேவைப்படுவது ஏன்?

**எமது உடல் கோடிக்கணக்கான செல்களினால் ஆனது. இந்த செல்களின் சீரான செயற்பாடுகளுக்கு காபோஹைட்ரேற் அவசியமானது. காபோஹைட்ரேற் ஆனது காபன், ஒட்சிசன், ஹைட்ரஜன் ஆகிய மூலப் பொருட்களினால் ஆனது. மனித உடலில் காபோஹைட்ரேற் குளுக்கோசாக மாற்றம் பெறுவதுடன், செல்கள் அவற்றினை ஆகாரமாக்கிக் கொள்கின்றன. வெல்லத்துக்குப் பதிலாக மேலும் பல மூலக்கூறுகள் எமது உடலுக்குத் தேவைப்படுகின்றன. அவை கொழுப்பும் புரதமும் ஆகும். நாளாந்தம் நாம் உட்கொள்ளும் உணவுகளில் கொழுப்பு, புரதம், காபோஹைட்ரேற் இருப்பதோடு, உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க இவையனைத்தும் அடங்கிய நிறையுணவு அவசியம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5
குறுக்கெழுத்துப் போட்டி இல.183




### மேலிருந்து கீழ்

1. உருண்டை வடிவிலான இனிப்புப் பண்டமொன்று.
2. ஜப்பானின் நாடாளுமன்றத்திற்கு வழங்கப்படும் பெயர்.
3. நெல், சோளம், கோதுமை என்பனவற்றின் உள்ளீடு இவ்வாறு அழைக்கப்படும்.
4. தோழி-எதிர்ப்பாற் சொல்.
5. கேலி என்றும் அர்த்தப்படும்.
6. நாற்குணங்களில் ஒன்று.
7. திருக்குறளில் இவை மாத்திரம் 1330 உள்ளன.
8. மொங்கோலியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் அமைந்திருக்கும் பாலைவனம்.

### இடமிருந்து வலம்

1. 2012 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் நடைபெறவுள்ள நகரம்.
4. நீரில் துடுப்பால் தொடுத்து பயணிக்கக்கூடிய போக்குவரத்துச் சாதனம்.
6. முற்காலத்தில் பிரதான போர்ப்படைகள் இத்தனை இருந்தன.
8. திருகோணமலையின் புராதனப் பெயர்.
9. பெண் யானை.

### குறுக்கெழுத்துப்போட்டி 180 விடைகள்

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் |
|---|---|
| 01. அபிநயம் | 01. அமேசன் |
| 02. மேதாவி | 04. பிதா |
| 03. தோகை | 05. ஈகை |
| 05. ஈர்க்கு | 06. நவின்றார் |
| 07. பசு | 07. பங்குனி |
| 08. தொனி (தலைகீழ்) | 09. மூசு |

குறுக்கெழுத்துப் போட்டி -183
"விஜய்" த.பெ.எண். 2037
கொழும்பு

**பாராட்டுப் பெறுவோர்**

கே.ஆர்.ஸம்றத், தரம் - 8B,
ஜாயா மு.ம.வித்., கடாண்டுகம.

ஐ.காயத்ரி, தரம் - 9T,
பெண்கள் உயர்நிலை பாட., கண்டி.


மு.றபீஸ், தரம் - 7,
அல்-மிஸ்பாஹ் வித்., கல்முனை.

### அன்பு மாணவர்களே!

இது உங்கள் கவனத்திற்கு.....

இனிவரும் போட்டிகளுக்கான விடைகளை நீங்கள் தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள். விடைகளை அனுப்பும் போது தவறாமல் உங்கள் பெயர், முகவரி, கல்வி கற்கும் தரம், பாடசாலையின் பெயர், அதன் முகவரி, வசிக்கும் நகரம், மாவட்டம் என்பனவற்றையும் எழுதி அனுப்புங்கள். அவை போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை கால தாமதமின்றி சேர்ப்பதற்கு பெரும் துணையாக அமையும். அத்துடன், நீங்கள் உங்களுக்கு விரும்பிய எந்தவொரு போட்டியிலும் கலந்து கொள்ளலாம் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

1
வழி காட்டுங்கள்






தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2008.09.10 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.


**அற்லஸ் அறிவுக்கு விருந்து 172**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

### உங்களுக்குத் தெரியுமா? 3

(A) இந்தியாவின் ஆக்ரா நகரில் யமுனை நதிக்கரையை அண்டி இந்த அழகிய கட்டடம் அமைந்துள்ளது. முற்றிலும் வெள்ளை நிறப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டுள்ள இதன் அழகிய தோற்றம் சூழல் மாசடைதல் காரணமாக மங்கி வருவதாக சூழலியலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். கட்டடத்தின் நான்கு பக்க அமைப்புக்களும் ஒரே தோற்றத்தைக் கொண்டுள்ளன. மொகலாய சாம்ராஜ்ஜியத்துக்கு உரியதாகக் கூறப்படும் இந்த அபூர்வ கட்டடம், குறித்த சாம்ராஜ்ஜிய கால மன்னரொருவரால் இறந்த தனது மனைவியின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. உலகின் தலைசிறந்த ஏழு அதிசயங்களில் இது தனக்கென ஓர் இடத்தைத் தக்க வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

✱ இந்தக் கட்டடத்தின் பெயரையும் அது எந்த மன்னரின் பணிப்பின் கீழ் கட்டப்பட்டது என்பதையும் குறிப்பிடுக.

கட்டடத்தின் பெயர்:..............................
மன்னரின் பெயர்:..............................



✱✱ இங்குள்ள மூன்று படங்களில் மேற்கூறிய கட்டடத்தைக் குறிக்கும் படத்தில் X அடையாளமிடுங்கள்.

**(B) எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக**

1. அவசியம் - ..............................
2. உத்தமம் - ..............................
3. கீர்த்தி - ..............................
4. கலக்கம் - ..............................
5. இல்லறம் - ..............................

### கணக்குப் புதிர் 4

(A) பிருந்தன் என்பவர் ரவியின் தம்பி. ரவி மல்லிகாவுக்குத் தம்பி. விக்னேஷ் பிருந்தனின் அண்ணா. ஆனால், கேசவனுக்குத் தம்பி.

✱ இவர்களில் மூத்தவர் யார்?
..............................

✱✱ ஐவரிலும் நடுப்பட்டவர் பெயர் என்ன?
..............................

✱✱✱ வயதில் குறைந்தவர் யார்?
..............................

(B) இடைவெளிகளில் வரவேண்டிய எண்கள் எவை?

(i)

| | | |
|---|---|---|
| 7 | 8 | ? |
| 5 | ? | 7 |
| 12 | 14 | 16 |

(ii)

| | | |
|---|---|---|
| 5 | ? | 20 |
| 6 | 5 | ? |
| ? | ? | 42 |

### ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள் 2





### அறிவுக்கு விருந்து 169 விடைகள்

**போட்டி: 01**
சரியான வசன ஒழுங்கமைப்பு:-
5, 2, 4, 6, 1, 3

**போட்டி: 02**
a) 64 பந்துகள்
b) நீல நிறப் பந்து
c) 6 பச்சை நிறப் பந்து
d) பச்சை - 6
வெள்ளை - 6
e)
பெட்டி A - சிவப்பு நிறப் பந்துகள் - 18
பச்சை நிறப் பந்துகள் - 6
பெட்டி B - சிவப்பு நிறப் பந்துகள் - 5
வெள்ளை நிறப் பந்துகள் - 6
பச்சை நிறப் பந்துகள் - 6
பெட்டி C - பச்சை நிறப் பந்துகள் - 8
நீல நிறப் பந்துகள் - 13
வெள்ளை நிறப் பந்துகள் - 2

**போட்டி: 03**
(A)
1-4
2-1
3-5
4-2
5-3

(B)
1. dentist - syringe with needle
2. gardener - watering can
3. seamster - cloth
4. photographer - camera

### அற்லஸ் அறிவுக்கு விருந்து - 169 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ஸப்ரினா நசீர், தரம் - 10C,
ஸ்ரீ தமிழ் ம.வித்., பலாங்கொடை.

**போட்டி: 02**
சுசந்தினி யோகேஸ்வரன், தரம் - 8,
நல்லாயன் ம.கல்., கண்டி.

**போட்டி: 03**
எம்.அஸ்மத் ஸகி, தரம் - 9A,
காத்தான்குடி ம.ம.வித்., புதிய காத்தான்குடி-3.

**போட்டி: 04**
ஜெ.ஜெயப்பிரஷாந்த், தரம் - 3D,
சென்.ஜோன் பொஸ்கோ கல்., ஹட்டன்.

**போட்டி: 05** (குறு.போ-180)
உ.தர்ஷிகன், தரம் - 10E,
சித்தி விநாயகர் இ.கல்., மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.

# அவுஸ்திரேலியாவின் 'கெரவேன்' குடியிருப்பு முறை





அவுஸ்திரேலியாவில் 'கெரவேன்' குடியிருப்பு முறை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. வாகனங்களை வீடுகளாக மாற்றி அதில் குடியிருப்பதே 'கெரவேன்' குடியிருப்பு முறை என்று அங்கு குறிப்பிடப்படுகின்றது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பின் காரணமாக வாடகை வீடுகளில் குடியிருப்பது சாத்தியப்படாத நிலையில் அங்கு அநேகமானோர் இவ்வாறு நடமாடும் வாகனங்களை தமது வீடுகளாக வாடகைக்கு அமர்த்தி வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவுஸ்திரேலியா நிலப்பரப்பில் விசாலமான நாடாக இருந்தபோதிலும் அங்கு கிராமப்புறங்களைச் சேர்ந்த பலர் தமது அவசியத் தேவைகள் கருதி நகர்ப்புறங்களை நோக்கி இடம் பெயர்ந்து வருவதனால் நகரப்பகுதிகளில் சனத்தொகை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே அங்கு வீடொன்றை வாடகைக்கு பெறுவதென்றாலும் பெருமளவு பணத்தை செலவிட வேண்டிய நிலை உள்ளது. இதன்படி அவுஸ்திரேலியாவில் வாடகை வீடொன்றைப் பெறுவதற்கு மாதமொன்றிற்கு 360 அவுஸ்திரேலிய டொலர்களை செலுத்த வேண்டியுள்ளது. இது அநேகமானோரின் சம்பளத்தையும் விட கூடிய தொகையாக இருப்பதாகவும் கருதப்படுகின்றது. ஆனால், 'கெரவேன்' வீடு அப்படியல்ல. அதில் வாடகைக்குக் குடியிருப்பதற்கு மாதமொன்றிற்கு 120 அவுஸ்திரேலிய டொலர்களே அறவிடப்படுகின்றது. இதனால்தான் அங்கு இந்த 'கெரவேன்' குடியிருப்பு முறை அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

இந்த வாகனத்தின் உட்புறமானது சாதாரண வீட்டைப் போன்ற தோற்றத்தில் அமைக்கப்பட்டிருப்பதே அதன் சிறப்பம்சமாகும்.

## தங்கத்திலான நத்தார் தாத்தா



படத்தில் காணப்படுகின்ற இந்த நத்தார் தாத்தா தங்கத்தினால் செய்யப்பட்ட ஒரு சிலையாகும். இதன் உயரம் 41 செ.மீற்றர், எடை 20 கி.கிராம் ஆகும்.

சீன நாணயத்தில் 200 மில்லியன் யென் பெறுமதி மிக்க இந்த நத்தார் தாத்தாவின் சிலையில் 23 இரத்தினக்கற்களும் பத்து தங்க நாணயக் குற்றிகளும் சேர்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்த விலை மதிப்பு மிக்க சிலை சீனாவிலேயே உள்ளது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2008, செப்டெம்பர் மாதம் 03ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 03, 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org